# பரிபூரண ஜீவன்

# PARIPOORANA JEEVAN




## சபைகள் விசுவாசத்தில் ஸ்திரப்பட்டு, நாளுக்கு நாள் பெருகின

(அப்போஸ்தலர் 16:5)

**THE TAMIL DISTRICT COUNCIL OF THE SIAG**

September - October 2023
Volume : 63

ஆண்டு சந்தா ₹ 120/-
Issue :5

# 75th Annual Conference, A.G. Campsite, Madurai
























ஆசிரியரிடமிருந்து........!

# சபைகள் வளரட்டும்!

**சபைகள் விசுவாசத்தில் ஸ்திரப்பட்டு நாளுக்கு நாள் பெருகின (அப்.16: 5)**



கிறிஸ்துவுக்குள் அன்பான வாசகர்கள் அனைவருக்கும் இயேசுவின் நாமத்தில் இனிய வாழ்த்துக்கள்!

இந்த கடைசி காலங்களில் வாழ்ந்து கொண்டிருக்கும் நாம் தேவனுடைய விருப்பத்தை நிறைவேற்றுவதில் அதிக கவனம் செலுத்த வேண்டும். அவருடைய விருப்பங்களில் பிரதானமானது எல்லா ஜனங்களும் இரட்சிக்கப்படவேண்டும், சபைகள் வளர வேண்டும் என்பதே. அவருடைய இந்த விருப்பத்தைக் குறித்தும் நாம் அதை நிறைவேற்ற என்ன செய்ய வேண்டும் என்றும் பார்ப்போம்!

## தேவனின் திட்டத்தில் சபை வளர்ச்சி

ஒவ்வொரு மனிதனும் இரட்சிக்கப்பட வேண்டும் என்பதே மனுக்குலத்திற்கான தேவனுடைய சித்தமும் விருப்பமுமாயிருக்கிறது என்று நாம் முதலாவதாக உணர்ந்தறிய வேண்டும் (லூக்கா 19:10; யோவான் 3:16;2பேதுரு3:9;1தீமோ.2:4). பூமியிலுள்ள சகல ஜாதிகளும், தேசங்களும் ஆசீர்வதிக்கப்பட வேண்டும் என்பதற்காக தேவன் ஆபிரகாமை அழைத்தார் (ஆதி.12:1-3). தம்முடைய செய்தியும் இராஜ்யமும் உலக முழுவதும் பரவ வேண்டும் என்ற தம் விருப்பத்தை தீர்க்கதரிசிகள் மூலம் வெளிப்படுத்தினார் (ஏசாயா 11:9; ஆபகூக் 2:14; தானி.2:35) . தேவ ராஜ்யம் வளரும் என்று இயேசு போதித்தார். கடுகு விதை போலவும் புளித்த மாவு போலவும் தேவ ராஜ்யம் செயல்படும் என்று அவர் ஒப்பிட்டார் (மத்.13:31-33). அவரை பின்பற்றுபவர்கள் அனைவரும் ‘சகல ஜனங்களையும் சீஷராக்க வேண்டும்’ என்பதே அவரது இறுதி கட்டளையாக இருந்தது (மத்.28:19; மாற்கு 16:15; லூக்கா 24:47). அப்போஸ்தலர்கள் பூமியின் கடைசி பரியந்தமும் சாட்சிகளாய் இருந்தனர் (அப்.1:8). மேலும் ஒருநாள் வரும், அப்பொழுது பரலோகத்தில் “சகல ஜாதிகளிலும் கோத்திரங்களிலும் ஜனங்களிலும் பாஷைக்காரரிலிருந்து வந்து, வெள்ளை அங்கிகளைத் தரித்து, ஆட்டுக்குட்டியானவருக்கு முன்பாக நிற்பார்கள்” என்று வாசிக்கிறோம்! (வெளி.7:9).

## ஆதித் திருச்சபையின் வளர்ச்சி

அப்போஸ்தலர்கள் நடபடிகள் புத்தகத்தில் “வளர்ச்சி அறிக்கைகளை” (Growth Reports) லூக்கா தேவ ஆவியினால் ஏவப்பட்டு எழுதியதை நாம் வாசிக்கும்போது சபை வளர்ச்சியின் மீது தேவனுடைய ஆர்வம் தெளிவாக காணப்படுகின்றது.

பெந்தெகொஸ்தே நாளன்று ஏறக்குறைய 3000 பேர் கிறிஸ்தவர் களானார்கள் (அப்.2:41). தினந்தோறும் ஜனங்கள் சபையில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர் (2:47). பின்பு விரைவிலேயே சபையில் 5000 பேர்

இருந்தார்கள் (4:4). அதன் பிறகு திரளான கூட்டத்தாராகிய ஆண்களும் பெண்களும் சபைக்குள் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள் (5:14), மற்றும் சீஷர்களின் எண்ணிக்கை தொடர்ந்து வளர்ந்தது (6:1,7; 9:31; 16:5) .

பல இடங்களில் "அநேகர்" (9:42; 14:21; 18:8), "அநேக ஜனங்கள்" (11:21,24), திரளான ஜனங்கள் (14:1; 17:4), "அநேகம் பேர்" (17:12) கிறிஸ்தவர்களானார்கள் என்று எழுதப்பட்டுள்ளது. இதன் விளைவாக, "தேவ வசனம் வளர்ந்து பெருகிற்று" (அப்.12:24), "விருத்தியடைந்தது" (6:7), "கர்த்தருடைய வசனம் அத்தேசமெங்கும் பிரசித்தமாயிற்று" (13:49) மற்றும் "இவ்வளவு பலமாய்க் கர்த்தருடைய வசனம் விருத்தியடைந்து மேற்கொண்டது" (19:20) என்று வாசிக்கிறோம்! .

சபை எண்ணிக்கையிலும் ஆவிக்குரிய தரத்திலும் வளர்ச்சியடைய வேண்டும் என்று தேவன் விரும்புகிறார் (எபே.4:11-16). எண்ணிக்கைக்காக நாம் சத்தியத்தைத் தியாகம் செய்வதை அவர் விரும்புகிறதில்லை என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன் (யோவான் 17:17).

## சபை வளர்ச்சியில் விசுவாசியின் பங்கு

திருச்சபை வளரவும் தேவ ராஜ்யம் விரைவில் கட்டப்படவும் ஒவ்வொரு விசுவாசியும் தன்னுடைய பங்கை நிறைவேற்ற வேண்டும் என்று தேவன் விரும்புகிறார். கீழ்க்கண்ட ஏழு காரியங்களை ஒவ்வொரு தேவனுடைய பிள்ளையும் தன்னுடைய ஸ்தல சபையிலும், ஸ்தல சபைக்காகவும் செய்யும்போது அந்த சபை ஆசீர்வதிக்கப்படும் மற்றும் ஆசீர்வாதமாக மாறும்!

### 1. ஜெபத்தில் உறுதியாயிருங்கள்

ஒரு ஸ்தல சபையின் ஆசீர்வாதத்திற்காகவும் வளர்ச்சிக்காகவும் ஒரு விசுவாசி செய்யும் மிகப்பெரிய காரியம் ஜெபம். 1தீமோ.2:1ல் நாம் எல்லாருக்காகவும் ஜெபம்பண்ண வேண்டும் என்றும், எபேசியர் 6:18ல் நாம் சகல பரிசுத்தவான் களுக்காகவும் ஜெபம்பண்ண வேண்டும் என்று அப்.பவுல் கூறுகிறார். ஒரு ஸ்தல சபையின் வெற்றி அந்த சபை விசுவாசிகளின் ஜெபத்தில் தான் இருக்கிறது (யாத்.17:8-13). உங்கள் சபை போதகருக்காக தினமும் ஜெபியுங்கள். தேவன் அவரை ஊழியத்தில் வல்லமையாக பயன்படுத்தவும், சபையை தேவ சித்தத்தின்படி நடத்த நல்ல சுகம், ஞானம், அபிஷேகம், கிருபைகளை தேவன் தரும்படியாகவும் ஜெபியுங்கள். சபை மூப்பர்கள், தலைவர்கள், விசுவாசிகள் அனைவருக்காகவும் ஜெபியுங்கள். சபையின் எழுப்புதலுக்காகவும், வளர்ச்சிக்காகவும் தினமும் ஜெபியுங்கள்.

### 2. சபை கூடி வருதலை விட்டுவிடாதிருங்கள்

சபை கூடிவருதலை ஒருபோதும் விட்டுவிடாதீர்கள் (எபிரெயர் 10:25; ஏசாயா 58:13). வாரத்தின் முதல் நாளை தேவனுக்கு கொடுத்து, தேவ ஜனங்களோடு ஜெபிப்பதற்கும், ஆராதிப்பதற்கும், வசனத்தை கேட்பதற்கும் முக்கியத்துவம் கொடுங்கள். ஒவ்வொரு ஞாயிறும் விசுவாசத்தோடும் எதிர்பார்ப்போடும் ஆராதனைகளில் குடும்பமாக பங்குபெறுங்கள். தேவன் உங்களோடு பேசும்படி ஜெபத்தோடு செல்லுங்கள். போதகர் பேசும் செய்திகளை குறிப்பெடுக்க நோட்டு, பேனா கொண்டுசெல்லுங்கள். தேவன் உங்களோடு பேசிய காரியத்திற்கு உடனடியாக கீழ்ப்படிய ஒப்புக்கொடுங்கள். சரியான நேரத்திற்கு ஆலயத்திற்குச் செல்ல பிரயாசப்படுங்கள். என்னை கனம்பண்ணுகிறவர்களை நான் கனம்பண்ணுவேன் என்று கர்த்தர் சொல்லியிருக்கிறார் (1சாமு. 2:30)

### 3. அன்பு காட்டுங்கள்

சபையில் எல்லாரிடமும் அன்பாயிருங்கள் (யோவான் 13:34). மற்றவர்கள் உங்களுக்கு எவைகளைச் செய்ய விரும்புகிறீர்களோ, அவைகளை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள் (மத்தேயு 7:12). வார்த்தையினாலும் கிரியையினாலும் அன்பு கூருங்கள். விசுவாசிகளை உற்சாகப்படுத்துங்கள், மன்னியுங்கள், உங்களால் இயன்ற மட்டும் தேவையுள்ளவர்களுக்கு உதவி செய்யுங்கள். மனத்தாழ்மையினாலே மற்றவர்களை உங்களிலும் மேன்மையானவர்களாக எண்ணுங்கள் (பிலி.2:3). ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் என்று புதிய ஏற்பாட்டில் 16 முறை கூறப்பட்டுள்ளது. சபைக்கு புதிதாக வருகிறவர்கள் விசுவாசிகளிடத்தில் தேவ அன்பை கிரியையில் காண விரும்புகிறார்கள்!.

### 4. ஒற்றுமையை காத்துக்கொள்ளுங்கள்

சமாதானக்கட்டினால் ஆவியின் ஒருமையைக் காத்துக் கொள்ளுவதற்கு ஜாக்கிரதையாயிருங்கள் என்று வேதம் கூறுகிறது (எபேசியர் 4:3). ஒற்றுமை தேவனுடைய ஆசீர்வாதங்களை சபைக்குள் கொண்டு வருகிறது. ஆனால் பிரிவினை, சண்டை, பொறாமை, வாக்குவாதம் இவைகள் திருச்சபையை அழிக்க சாத்தான் உபயோகிக்கும் கருவிகள். ஆகவே சகலவித புறங்கூறுதல்கள், கோபங்கள், கசப்புகள் ஆகியவைகளை ஒழித்துவிடுங்கள் (எபே.4:31). தேவன் நமக்கு ஒப்புரவாக்குதலின் ஊழியத்தை தந்திருக்கிறார் (2கொரி.5:18). யாவரோடும் சமாதானமாயிருங்கள் (ரோமர் 12:18). சமாதானத்துக்கு அடுத்தவைகளையும், அந்நியோந்நிய பக்திவிருத்தி உண்டாக்கதக்கவைகளையும் எப்பொழுதும் நாடுங்கள் (ரோமர் 14:19). சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள், அவர்கள் தேவனுடைய புத்திரர் என்னப்படுவார்கள் என்று இயேசு கூறுகிறார் (மத்தேயு 5:9).

### 5. வரங்களைப் பயன்படுத்துங்கள்

தேவன் இரட்சிக்கப்பட்ட, அபிஷேகம் பெற்ற ஒவ்வொரு விசுவாசிக்கும் வரங்களை தந்திருக்கிறார். உங்கள் வரங்களை கண்டுபிடித்து சபையின் பிரயோஜனத்திற்காக பயன்படுத்துங்கள். பார்வையாளராக இராமல் பங்குள்ளவர்களாக இருங்கள் (1கொரி.12:8-10; 1பேதுரு 4:10; ரோமர் 12:6-8). உங்கள் தாலந்துகளைப் புதைத்து வைக்காதீர்கள் (மத்.25:18). தேவன் உங்களுக்கு கொடுத்த வரத்தை அனல்மூட்டி எழுப்பி விடுங்கள் (2தீமோ.1:6). உங்களால் இயன்ற மட்டும் போதகரோடு சேர்ந்து ஊழியம் செய்து, சபை தரிசனத்தை நிறைவேற்றுங்கள். பராமரிப்புக் குழு, ஜெபக்குழுக்களில் இணைந்து செயல்படுங்கள். சபையில் நடைபெறும் பயிற்சி வகுப்புகள், வேதப்பாடங்களில் பங்கு பெற்று உங்கள் திறமைகளை வளர்த்துக் கொள்ளுங்கள். ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்தால் அவனைப் பிதாவானவர் கனம்பண்ணுவார் என்று இயேசு சொன்னார் (யோவான் 12:26).

### 6. பணத்தை முதலீடு செய்யுங்கள்

நீங்கள் பங்குபெறும் மற்றும் உங்கள் ஆத்துமாவை போஷிக்கும், உங்களை பராமரிக்கும் ஸ்தல சபையில் உங்கள் முழு தசமபாகத்தையும் செலுத்த வேண்டும் (மல்கியா 3:8-12). உங்கள் முதற்பலன்களை கர்த்தருக்கு கொடுத்து அவரை கனம்பண்ணுங்கள் (நீதி.3:9,10). உற்சாகமாக ஊழியத்தின் தேவைகளுக்கு கொடுங்கள் (2கொரி.9:7). பவுலைப் போல ஆத்துமாக்களுக்காக செலவுபண்ணவும்

செலவுபண்ணப்படவும் விரும்புங்கள் (2கொரி.12:15). இயேசு,"நீங்கள் மாளும்போது உங்களை நித்தியமான வீடுகளிலே ஏற்றுக்கொள்வாருண்டாகும்படி, அநீதியான உலகப்பொருளால் உங்களுக்குச் சிநேகிதரைச் சம்பாதியுங்கள்" என்று கூறினார் (லூக்கா 16:9). சிறுக விதைக்கிறவன் சிறுக அறுப்பான்; பெருக விதைக்கிறவன் பெருக அறுப்பான் என்று வேதம் கூறுகிறது (2கொரி. 9:6).

### 7. ஆத்தும ஆதாயம் பண்ணுங்கள்

நீங்கள் பூமிக்கு உப்பாகவும், உலகத்திற்கு வெளிச்சமாகவும் இருக்கிறீர்கள் (மத்தேயு 5:13,14). நாம் இருக்கும் இடங்களில் தேவனுக்கு சாட்சியாக வாழ்ந்து, சுவிசேஷம் கூறி, ஆத்துமாக்களை ஆதாயம் செய்ய வேண்டும். இயேசுவின் பிரதான கட்டளையை (மத்தேயு 28:18-20) நிறைவேற்ற பிரயாசப்படாத எந்த கிறிஸ்தவனும் கிறிஸ்துவின் ஜீவன் இல்லாதவன். ஆத்தும ஆதாயம் செய்யாதவன் எளிதாக பின்வாங்கி போவான். உங்கள் உற்றார், உறவினர்கள், உடன் வேலையாட்களை நண்பர்களாக்கி, அவர்களின் இரட்சிப்பிற்காக ஜெபித்து, ஆதாயம் செய்து, சபைக்கு அழைத்துச் செல்லுங்கள். சுவிசேஷகனுடைய வேலையை தொடர்ந்து செய்யுங்கள் (2தீமோ.4:5; மாற்கு 16:15). வருடத்தில் இரண்டு பேரையாவது இலக்கு வைத்து, இரட்சிப்புக்குள் நடத்தி, ஞானஸ்நானம் பெற செய்து, சீஷராக்க தீர்மானியுங்கள்!

மேற்கூறிய இந்த ஏழு காரியத்தையும் நீங்கள் செய்ய தீர்மானிக்கும்போது திருச்சபையின் தூண்களாக நீங்கள் மாற முடியும். மேலும் இவற்றை செய்யும்போது திருச்சபை வேகமாக வளரும், மகிழ்ச்சியும் வல்லமையும் சபையில் காணப்படும், தேவ ராஜ்யம் கட்டப்படும்! கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக.

**Rev. Dr. ஜெரி டேனியல்**
(ஆசிரியர், பரிபூரண ஜீவன்)
மண்டல தலைமைப் போதகர், திருச்சி தெற்கு மண்டலம்.

தாங்கள் பரிபூரண ஜீவன் பத்தரிக்கை மூலமாக ஆசீர்வதிக்கப்பட்டிருந்தால் உங்கள் சாட்சிகளை வாட்ஸ்அப் மூலமாகவோ, தபால் மூலமாகவோ தெரிவிக்கலாம். மேலும் ஆவிக்குரிய ஜீவியத்திற்கு பயனுள்ள செய்திகள், துணுக்குகள் ஆகியவற்றையும் அனுப்பலாம்.

**நீங்கள் அனுப்ப வேண்டிய முகவரி**

**Rev. JERRY DANIEL**
303, C Block, Roshan Residency,
6, VOC Road, Cantonment, TRICHY-620 001
Cell : 94434 15484

## ஜெபியுங்கள் ! தாங்குங்கள் !!

பரிபூரண ஜீவன் பத்திரிக்கை ஊழியத்தின் மூலம் நீங்கள் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பீர்கள், எனவே உங்கள் சாட்சிகளை எழுதி அனுப்புங்கள். பத்திரிக்கை ஊழியத்தின் தேவையை சந்திக்க ஒரு வெளியீட்டிற்கு ஆகும் செலவு ரூ.**1,25,000.** உதாரத்துவமாய் கொடுத்து உதவுங்கள் அல்லது உங்களால் இயன்ற அளவு கொடுத்து பத்திரிக்கை ஊழியத்தை தாங்குங்கள். இவை எல்லாவற்றிக்கும் மேலாக தொடர்ந்து இந்த ஊழியத்திற்காக ஜெபியுங்கள் நன்றி.



# இயேசு கிறிஸ்துவின் வருகையும், உலக முடிவும் அதிசீக்கிரம்

**Rev. P.S. ராஜமணி**
இயக்குநர் - அகில இந்திய விஷன் 2020

பாகம்-1: நிறைவேறிவிட்ட தீர்க்கதரிசனங்கள், ...தொடர்ச்சி

**3.நடந்து முடிந்த யுத்தங்கள் :** யுத்தங்களையும், யுத்தங்களின் செய்திகளையும் கேள்விப்படுவீர்கள். கலங்காதபடி எச்சரிக்கையாயிருங்கள். இவைகளெல்லாம் சம்பவிக்க வேண்டியதே. ஆனாலும், முடிவு உடனே வராது.

ஜனத்துக்கு விரோதமாய் ஜனமும், ராஜ்யத்துக்கு விரோதமாய் ராஜ்யமும் எழும்பும்; பஞ்சங்களும், கொள்ளைநோய்களும், பூமியதிர்ச்சிகளும் பல இடங்களில் உண்டாகும் (மத்தேயு 24:6,7).

அணு ஆயுதப் போரைத் தவிர்க்க ஏற்படுத்தப்பட்ட சர்வதேச இயக்கத்தின் தலைவராகப் பணியாற்றிய ரஷ்ய டாக்டர் குஜ்மிட் சோவ் என்பவர் 1984ல் இந்தியாவிற்கு வந்தபோது கூறியது:

“மனித வரலாற்றில் இதுவரை சுமார் 14500 யுத்தங்கள் நடந்துள்ளன. அதில் இரண்டு உலக மகா யுத்தங்களாகும்”. இதில் சுமார் 400 கோடி மக்கள் மாண்டனர்.

இன்று உலக அளவில் யுத்தத்திற்காக செலவு செய்யப்படும் பணம் ஒரு நிமிடத்திற்கு சுமார் 3 மில்லியன் டாலர். அதாவது சுமார் 15 கோடி ரூபாய். ஒரு நிமிடத்திற்கு இவ்வளவு என்றால் ஒரு மணிக்கு, ஒரு நாளுக்கு, ஒரு மாதத்திற்கு, ஒரு வருடத்திற்கு எவ்வளவு செலவாகுமென்று எண்ணிப் பாருங்கள். இந்தப் பணமெல்லாம் ஆக்கப்பூர்வமான காரியங்களுக்கு பயன்பட்டால் உலகம் எவ்வளவு முன்னேற்றமடையும்.

**முதல் உலக மகா யுத்தம் :** 1914 ஆகஸ்ட் 4ம் தேதி ஆரம்பித்து 1918 நவம்பர் 11ம் தேதி முடிந்தது. இங்கிலாந்திற்கும், ஜெர்மனிக்கும் நடந்த யுத்தம் இது. ஆனால் 33 நாடுகள் இதில் பங்குபெற்றன. அன்றைய நாட்களில் இந்த நாடுகள் உலகத்தில் முக்கிய பங்கு வகித்தவை. எனவே இது உலக மகா யுத்தம் என்று அழைக்கப்பட்டது.

ஆகாய விமானங்களும், நீர் மூழ்கிக் கப்பல்களும் முதன் முதலாக யுத்தத்தில் பயன்படுத்தப்பட்டது. சுமார் 4 கோடி மக்கள் மாண்டனர். சுமார் 11 இலட்சம் கோடி ரூபாய்க்கு சமமான பொருட்கள் நாசமாக்கப்பட்டன. இன்றைய நிலையில் இது இன்னும் நூறு மடங்கு மதிப்புள்ளதாகும்.

**இரண்டாம் உலக மகா யுத்தம் :** 1939 செப்டம்பர் 3ம் தேதி ஆரம்பமாகி 1945 செப்டம்பர் 2ம் தேதி முடிவடைந்தது. ஜெர்மனி, ஜப்பான், இத்தாலி ஆகிய நாடுகள் ஒரு அணியாகவும் பிரான்ஸ், இங்கிலாந்து, ரஷ்யா ஆகிய நாடுகள் கூட்டமாகவும் இந்த யுத்தத்தில் ஈடுபட்டன. 1945 ஆகஸ்ட் 6ம் தேதி ஜப்பானிலுள்ள ஹிரோஷிமா நகரிலும், 9ம் தேதி நாகசாகி பட்டணத்தின் மேலும் அமெரிக்க அணுகுண்டுகளைப் போட்டது. இந்த இரு பட்டணங்களும் தரைமட்டமாக்கப்பட்டதுடன் ஏராளமானபேர் மடிந்தனர்.

5 கோடி மக்கள் கொல்லப்பட்டனர். கணக்கில் அடங்கா பொருட்கள் சேதமாகின.

## இஸ்ரவேலுக்கு விரோதமாக நடத்தப்பட்ட யுத்தங்கள்

1948 மே மாதம் 14ம் தேதி இஸ்ரவேல் சுதந்தரமடைந்தது. சுதந்தரப் பிரகடனம் பண்ணப்பட்ட சில மணி நேரத்திலேயே அண்டைநாடுகள் இஸ்ரவேல் மேல் போர் தொடுத்தன எனப் பார்த்தோம். இப்படி 5 யுத்தங்கள் நடந்தன.

**1. சுதந்தரப் போர் :** 1948 மே மாதம் 15ம் தேதி சிரியா, ஈரான், ஜோர்டான், எகிப்து, லெபனோன் ஆகிய 5 நாடுகள் இஸ்ரவேலைத் தாக்கின. இஸ்ரவேல் நாடு சுதந்தரம் அடைந்து முதல் ஓய்வுநாளைக் கூட ஆசரிக்க முடியாமல் தடுக்கப்பட்டது. எகிப்திலிருந்து ஆகாய விமானங்கள் புறப்பட்டு டெல்அவிவ் பட்டணத்தைத் தாக்கின. “இஸ்ரவேல் என்ற நாட்டை இல்லாமல் அழிப்போம்” என்று எகிப்தின் தலைநகர் கெய்ரோவிலிருந்து அறிவிப்புக் கொடுக்கப்பட்டது. எகிப்திய பீரங்கிப்படை டெல்அவிவ் மற்றும் எருசலேமைத் தாக்கின. கலிலேயா பகுதியை சிரியாவும், லெபனோனும் தாக்கின. கிழக்கே இருந்து ஜோர்டானும், ஈராக்கும் தாக்கின. ஏராளமான யூதர்கள் கொல்லப்பட்டனர்.

இஸ்ரவேலிடம் ஒரு சிறிய ஆகாய விமானம் மட்டுமே இருந்தது. ஒரு சிறிய பழைய கப்பல் ஒன்று மட்டுமே கடல் படையிடம் இருந்தது. இதை வைத்து இத்தனை நாடுகளையும் இஸ்ரவேல் துரத்தினது என்பது நம்பக்கூடாததாயிருந்தது. கர்த்தருடைய கரம் அவர்களுடன் இருந்ததால் இது சாத்தியமாயிற்று.

27 நாட்கள் இந்த யுத்தம் நடந்தது. பின்பு ஐக்கிய நாடுகள் சபை யுத்தத்தை நிறுத்தும்படி அறிவித்தது. இஸ்ரவேல் யுத்தத்தை நிறுத்தியது. ஆனால் அண்டை நாடுகள் தொடர்ந்து முன்னேறி வந்தன. அந்த ஆண்டு முழுவதும் யுத்தம் தொடர்ந்தது. 1949 பிப்ரவரி 24ம் தேதி எகிப்தும் இஸ்ரவேலும் போர் நிறுத்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன. மசூதி இருக்கும் பழைய எருசலேம் ஜோர்டான் நாட்டின் அதிகாரத்திலிருக்க தீர்மானிக்கப்பட்டது.

**2. சீனாய் யுத்தம் :** 1956 அக்டோபர் 29ம் தேதி எகிப்தும், அண்டை நாடுகளும் இஸ்ரவேல் மேல் படையெடுத்தன. நவம்பர் 5ம் தேதி போர் நிறுத்தம் செய்யப்பட்டது.

**3. ஆறு நாள் யுத்தம் (1967) :** 1967 ஜூன் மாதம் 5ம் தேதி முதல் 10ம் தேதி வரை (6 நாட்கள் மட்டுமே) நடைபெற்றது. இஸ்ரவேல் நாடு கடலுக்குள் தள்ளப்படும் என்று எகிப்து அதிபர் நாசர் அறிவித்து யுத்தத்தை ஆரம்பித்தார். ஐக்கிய நாடுகளின் ராணுவம் வாபஸ் ஆக வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். இது இவருக்கு தீமையாக முடிந்தது. கண் இமைக்கும் நேரத்தில் இஸ்ரவேல் ஆகாய விமானங்கள் எகிப்து, ஜோர்டான், சிரியா ஆகிய நாடுகளுக்குள் சென்று அவர்களின் போர் விமானங்களைத் தாக்கி அழித்தன. எதிரிகள் செய்வது அறியாது திகைத்து நின்றனர்.

1967 ஜூன் மாதம் 7ம் தேதி இஸ்ரவேல் சேனை ஜோர்டான் நாட்டின் படைகளை முறியடித்து பழைய எருசலேமுக்குள் நுழைந்து எருசலேம் பட்டணம் முழுவதையும் தங்கள் ஆட்சிக்குள் கொண்டு வந்தனர்.

சாலொமோன் காலத்தில் கட்டப்பட்ட தேவாலயத்தின் மேற்குச் சுவர் மட்டும் மீந்திருக்கிறது. அந்த சுவர் தற்போதுள்ள தரை மட்டத்திலிருந்து கீழே 40 அடி இருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

**4. பீரங்கிப் போர் :** 1968 ஆகஸ்ட் மாதம் 7ம் தேதி எகிப்தும் மற்ற அரபு நாடுகளும் இஸ்ரவேல் மீது போர் தொடுத்து படுதோல்வியடைந்தனர்.

**5. யோம் கிப்பூர் யுத்தம் (1973) :** 1973ல் இஸ்ரவேல் பாவ நிவிர்த்தி பண்டிகை கொண்டாடும் நாளில் எகிப்தும் மற்ற அரபு நாடுகளும் இஸ்ரவேல் மேல் படையெடுத்தன. இதிலும் இஸ்ரவேல் வெற்றி பெற்றது.

தொடரும்...



# ஆரோக்கியமான குடும்பம்

**Rev. J. ஸ்டேன்லி மாணிக்கராஜ்**

Senior Pastor, Assembly of God Church, Vellore
Secretary-Tamil District Council of SIAG

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் நல்வாழ்த்துக்கள். ஒரு மனிதன் தன்னுடைய வாழ்க்கையில் குடும்பம். சமுதாயம், திருச்சபை என்ற 3 பகுதிகளில் செயல்படவேண்டிய அவசியம் உண்டு. அநேக ஊழியர்களும், விசுவாசிகளும் இதை சமநிலையாக கையாளுவதில்லை. பெரும்பான்மையான நேரங்களில் குடும்பம் என்ற பகுதியில் தான் சமரசம் (Compromise) செய்கிறோம், அதன் விளைவுகளை சந்திக்கிறோம். ஒரு குடும்பம் ஆரோக்கியமாக, ஆசீர்வாதமாக இருக்க எளிய 10 வழிகளை கீழே தருகிறேன்.

**1. ஆண்டவரை மையப்படுத்தி வாழுங்கள் (God-Centered Family)**

என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்க வேண்டாம் (யாத்.20:3).

எல்லா பிரச்சனைகளுக்கும் பிசாசு காரணமாக இல்லாவிட்டாலும், பெரும்பாலான பிரச்சனைகளுக்கு அவன் ஒரு முக்கிய காரணம். ஆவிக்குரிய யுத்தத்தை ஆவிக்குரிய வழியில் தான் செய்ய வேண்டும். ஆகவே குடும்ப ஜெபங்கள். குடும்ப தியானங்கள், குடும்ப ஆராதனைகள், குடும்ப ஊழியங்கள் போன்றவற்றில் ஆண்டவரை மையப்படுத்தி குடும்பமாக செயல்படுங்கள்.

**2. தெளிவாக தொடர்பு கொள்ளுங்கள் (Communicate Clearly )**

நீங்கள் கேட்பதற்கு தீவிரமாகவும், பேசுவதில் பொறுமையாயும்...(யாக்.1:18)

பொறுமையாக கேட்பதும், தெளிவாக புரிந்துகொள்ளும்படி காரியங்களை செய்வதும் ஒரு ஆரோக்கியமான குடும்ப வாழ்விற்கு மிகவும் அவசியம். தரமான குடும்ப நேரங்களை செலவழியுங்கள். உங்களுடைய தொடர்புகள் தடையில்லா தொடர்புகளாக இருக்கட்டும்.

**3. தோழமை என்ற கருத்தை நடைமுறைப்படுத்துங்கள் (Practice Companionship )**

ஏற்ற துணையை அவனுக்கு உண்டாக்குவேன் (ஆதி.2:18).

சரீரத்திலும், மனதிலும், உணர்விலும் ஆவிக்குரிய பகுதிகளிலும் சரியாக பொருந்துகிற 'ஒருவரைத்தான்' ஆண்டவர் நமக்கு வாழ்க்கை துணையாக தருகிறார். ஆகவே, கணவன்-மனைவியாக அல்ல தோழனாக, தோழியாக பழக வேண்டும். தோழமை என்ற நடைமுறைப்படுத்தும்போது நெருக்கம் அதிகரிப்பதை உணரமுடியும். நம்பிக்கை வளரும், பாதுகாப்பு பெருகும், தியாகங்கள் கனப்படுத்தப்படும்.

**4. மூன்றாவது நபர் குறுக்கீட்டை தவிருங்கள் (Avoid the interference of third persons)**

இதனிமித்தம் தன் தகப்பனையும் தன் தாயையும் விட்டு... (ஆதி.2:24).

திருமணத்திற்கு பின்பு பெற்றோர்களை கைவிடவேண்டும் என வேதம் போதிக்கவில்லை. மாறாக மற்ற எல்லா உறவுகளை விடவும் திருமண உறவை மிக மேன்மையாக, உயர்வாக கருதவேண்டும். எக்காரணத்தை கொண்டும், 3வது நபரை அவர்கள் யாராக இருந்தாலும் திருமண உறவிற்குள் அனுமதிக்கக்கூடாது.

**5. அடிப்படை தேவைகளை உணர்ந்து கொள்ளுங்கள் ( Know the basic needs )**

அன்னாளே ஏன் அழுகிறாய் ... (1சாமு.1:8)

எல்க்கானா தன் மனைவியின் உணர்வுகள், மனஅழுத்தம், மற்றவர்களால் வரும் நிந்தனைகள், போராட்டங்கள் ஆகியவற்றை உணர்ந்ததால் அந்த குடும்பம் சாமுவேலை கொடுத்து தேசத்திற்கு, ஆசீர்வாதமாக மாறியது. வாழ்க்கை துணையின்/பிள்ளைகளின் அடிப்படை தேவைகளை உணருங்கள்.

**6. பொருளாதாரத்தை ஞானமாக கையாளுங்கள் (Handle finance carefully)**

என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி... நிறைவாக்குவார் (பிலி. 4:19)

பொருளாதார தேவைகளுக்காக கர்த்தரை சார்ந்திருப்பதும் நம்புவதும், இருப்பதற்குள் திருப்திபடவும், ஞானமாக செலவழிக்கவும், கடன் வாங்காதிருக்கவும் தீர்மானித்தால் குடும்பங்கள் நிச்சயம் ஆசீர்வாதமாக காணப்படும்.

**7. பிள்ளைகளை கர்த்தருக்குள் வளருங்கள் (Grow the children in the Lord)**

பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்திரம் (சங்.127:4).

பிள்ளைகள் ஆண்டவர் கொடுத்த பரிசு, அவர்களை அவருக்குள் பக்தியாக வளர்க்க வேண்டும் என்ற உணர்வு நமக்கு மிகவும் அவசியம். பிள்ளைகள் கர்த்தரால் போதிக்கப்படுவார்களாக. பிரபலமானவர்களாய் இருப்பதைவிட பரிசுத்தமுள்ளவர்களாய், பக்தியுள்ளவர்களாய் இருக்க அதற்கேற்றபடி வளர்க்க ஆண்டவர் உதவிசெய்வாராக.

**8. பிரச்சனைகளை உடனுக்குடன் சரிசெய்யுங்கள் (Resolve conflict quickly)**

சூரியன் அஸ்தமிக்கிறதற்கு முன்னாக உங்கள் எரிச்சல் தணியக்கடவது (எபே. 4:26).

எல்லா உறவுகளிலும் பிரச்சனைகள் உண்டு. ஆளத்துவ வேறுபாடுகளினால் (Personality conflict). கருத்து வேறுபாடுகளினால் (Ideological conflict) நிச்சயம் பிரச்சனைகள் வரும். ஈகோவை விட்டுவிட்டு பிரச்சனைகள் பெரிதாவதற்கு சத்துருவுக்கு இடம் கொடுக்காமல் உடனுக்குடன் பேசி சரிசெய்து கொள்ளுங்கள்.

**9. நெருக்கத்தை அதிகரியுங்கள் (Increase closeness)**

உன் இளவயதின் மனைவியோடே மகிழ்ந்திரு (நீதி. 5:18).

உங்களுடைய வாழ்க்கை துணையோடே சரீர பிரகாரமாக உணர்வு ரீதியாக, மனரீதியாக, ஆவிக்குரிய பிரகாரமாக நெருக்கத்தை வளர்த்துக் கொள்ளுங்கள். உங்களுடைய நெருக்கம் எந்த அளவுக்கு உள்ளது என்பதை ஆராய்ந்து பாருங்கள். குறைவான இடங்களை உடனே சரிசெய்யுங்கள்.

**10. பாலியல் உறவுகளில் திருப்தியாயிருங்கள் (Be satisfied in your sexual life)**

அவளுடைய நேசத்தால் நீ எப்பொழுதும் மயங்கியிருப்பாயாக..(நீதி. 5:19).

மனைவியோடு சரியான உறவில் இல்லாதவர்கள் தான் பாலியல் பிரச்சனைகளில் சிக்கி அபிஷேகத்தை, குடும்பத்தை, ஊழியங்களை, கிருபைகளை, வரங்களை இழந்துவிடுகிறார்கள். திருமணத்திற்கு வெளியே பாலியல் உறவுகளை தேடாதிருங்கள். அது கர்த்தர் அருவருக்கிற பாவம். திருமண உறவிற்குள் பாலியல் உறவு சந்தோஷமானது. ஆசீர்வாதமானது.

இந்த 10 காரியங்களை குறித்து விரிவாய் எழுதுவதற்கு அநேக காரியங்கள் உண்டு. ஆனால் ஒரு சில வரிகளில் அதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தியிருக்கிறேன். தொடர்ந்து இவைகளை குறித்து சிந்தியுங்கள்.

ஆண்டவர் தாமே நம்முடைய குடும்பங்களை ஆசீர்வாதமான, சந்தோஷமான குடும்பங்களாய் மாற்றுவாராக.

## பிள்ளைகளை வளர்ப்பதற்கு மூன்று முக்கிய ஆலோசனைகள் (3R's of Child Rearing)

“பிள்ளையானவன் நடக்க வேண்டிய வழியிலே அவனை நடத்து; அவன் முதிர்வயதிலும் அதை விடாதிருப்பான்” (நீதி 22:6) என்று வேதம் கூறுகிறது.

கிறிஸ்தவ பெற்றோர் மிகக் குறைவாக நம்பும், மதிப்பிடும், பின்பற்றும் வேத வசனங்களில் இதுவும் ஒன்றாகும். இதை நம்பாமலும், கடைபிடிக்காமலும் இருக்கும் பெற்றோர், பின்னாளில், தங்கள் பிள்ளைகள் தேவ சித்தப்படி வாழாததைக் கண்டு மனம் வருந்தும் நிலைக்கு உள்ளாகின்றனர்.

நான் இன்று உங்களுக்கு கூறப்போவது மூன்று முக்கிய ஆலோசனைகள் மட்டுமல்ல. ஒவ்வொரு ஆலோசனையும் மூன்று உபஆலோசனைகளை உள்ளடக்கியது. ஆகவே நமக்கு மொத்தமாக ஒன்பது ஆலோசனைகள் கிடைக்கும் (9R's).

### 1. பிள்ளைகளை பயிற்றுவிப்பதற்கான 3 காரணங்கள் 3 REASONS for Training

**அ) முரட்டாட்ட சுபாவம் (Rebellious Nature)**

எல்லா பிள்ளைகளுக்குள்ளும் இது காணப்படுகிறது. “பிள்ளையின் நெஞ்சில் மதியீனம் ஒட்டியிருக்கும்” என்று நீதிமொழிகள் 22:15 கூறுகிறது. பொய் சொல்லவும், திருடவும், பிறரை அடிக்கவும், கோள் சொல்லவும் நாம் பிள்ளைகளுக்கு கற்றுத்தர வேண்டியதில்லை. அதை அவர்கள் இயல்பாகவே செய்கின்றனர். சரியானதை செய்வதற்குத்தான் அவர்களுக்கு கற்றுத்தர வேண்டியுள்ளது.

**ஆ) பொல்லாத சுற்றுச்சூழல் (Rotten Environment)**

கலாத்தியர் 1:4ல் நாம் வாசிப்பதைப் போல், இன்று நம் பிள்ளைகள் பொல்லாத உலகத்தில் வாழ்கின்றனர். அவர்களைச் சுற்றிலும் எங்கும் பொல்லாங்கு நிறைந்துள்ளது. “இந்த பொல்லாத பிரபஞ்சத்தினின்று நாம் விடுவிக்கப்படும்படி இயேசு தம்மைத்தாமே பலியாக ஒப்புக்கொடுத்தார்.” இவ்வுலகத்தின் பொழுதுபோக்கு தீங்கானது; இவ்வுலகின் கல்வி பயிலும் இடங்கள் தீங்கானது. நீங்கள் உங்கள் பிள்ளைகளை புறவினத்தாரின் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் படிக்க அனுப்பினால், அவர்கள் புறவினத்தாரின் கருத்துக்களையும், மனப்பாங்கையும், செயல்முறைகளையும் கற்றுக்கொண்டு, புறவினத்தாரான நண்பர்களையே பெறுவர்.

**இ) நிஜமான சத்துருவாகிய சாத்தான் (Real Devil)**

மூன்றாவது முக்கிய காரணம்: உங்கள் பிள்ளைகளின் ஆத்துமாவை விடாது பின்தொடரும் எதிராளியாகிய சாத்தான். “தெளிந்த புத்தியுள்ளவர்களாய் இருங்கள்; விழித்திருங்கள்; ஏனெனில், உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம் போல் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடி சுற்றித்திரிகிறான்”, என்று 1 பேதுரு 5:8-ல் எழுதியிருப்பதைக் காண்கிறோம். இயேசுவிடம் இருப்பது பிசாசுக்கு வேண்டும். உங்கள் பிள்ளைகளை ஏமாற்றுவதும், அழிப்பதும், ஆக்கினைக்கு உள்ளாக்குவதுமே அவனுடைய நோக்கம்.

### 2. பிள்ளைகளை பயிற்றுவிப்பதற்கு அவசியமான மூன்று 3 REQUIREMENTS of Training

**அ) கட்டுப்பாடு (Restraint)**

சாமுவேல் தீர்க்கதரிசியிடம் கர்த்தர் கூறுவதை வாசிப்போம். “நான் ஏலியின் குடும்பத்திற்கு விரோதமாகச் சொன்ன யாவையும், அவன்மேல் அந்நாளிலே

வரப்பண்ணுவேன்; அதைத் தொடங்கவும் அதை முடிக்கவும் போகிறேன். அவன் குமாரர் தங்கள் மேல் சாபத்தை வரப்பண்ணுகிறதை அவன் அறிந்திருந்தும், அவர்களை அடக்காமற்போன பாவத்தினிமித்தம் நான் அவன் குடும்பத்துக்கு என்றும் நீங்காத நியாயத்தீர்ப்பு செய்வேன் என்று அவனுக்கு அறிவித்தேன்" (1சாமுவேல் 3:12,13). தந்தைமார் குடும்பத்தைக் கட்டுப்பாடுடன் நடத்துகிறவர்களாக இருக்க வேண்டும்.



- உங்கள் பிள்ளைகளின் செயல்பாடுகளை (Actions) கண்காணித்து கட்டுப்படுத்துங்கள்.
- உங்கள் பிள்ளைகளின் மனோபாவங்களை (Attitudes) கவனித்து சீர்படுத்துங்கள்.
- உங்கள் பிள்ளைகளின் நட்பு வட்டாரத்தை (Associations) தெரிந்துகொண்டு அதற்கேற்ற கட்டுப்பாடுகளை விதியுங்கள்.
- உங்கள் பிள்ளைகளின் தோற்றத்தைக் (Appearance) குறித்த (உடை, சிகை அலங்காரம்) கட்டுப்பாடுகளை நிர்ணயுங்கள்.

### ஆ) பிரம்பு (Rod)

பிள்ளை வளர்ப்பில் பிரம்புக்கு முக்கிய பங்கு உண்டு. "பிரம்பைக் கையாடாதவன் தன் மகனைப் பகைக்கிறான்; அவன்மேல் அன்பாயிருக்கிறவனோ அவனை ஏற்கனவே தண்டிக்கிறான்", என்று நீதிமொழிகள் 13:24 உரைப்பதை கேட்கிறோம். ஒவ்வொரு பெற்றோரும் தேவையான நேரத்தில், போதுமான அளவில் பிரம்பைக் கையாள அறிந்திருக்க வேண்டும். ஏனெனில் " நம்பிக்கை இருக்குமட்டும் உன் மகனை சிட்சை செய்; ஆனாலும் அவனைக் கொல்ல உன் ஆத்துமாவை எழும்பவொட்டாதே", என்று நீதிமொழிகள் 19:18 அறிவுறுத்துகிறது. பிரம்பைக் கையாள்வதன் நோக்கம் கற்றுத்தருவதாக மட்டுமே இருக்க வேண்டும். பிரம்பும் கடிந்து கொள்ளுதலும் ஞானத்தைக் கொடுக்கும் என்று வேதம் உறுதியளிக்கிறது (நீதிமொழிகள் 29:15).

### இ) கண்டிப்பு (Reproof)

கண்டிப்பு என்பது ஒரு தவறைப் பற்றியும், அதன் மோசமான பின்விளைவுகளைப் பற்றியும், விவரித்துக்கூறி, பிள்ளைக்கு கற்பிப்பது ஆகும். உதாரணமாக, "கடுஞ்சொற்களோ கோபத்தை எழுப்பும்" (நீதிமொழிகள் 15:1) "திருவசனத்தை அவமதிக்கிறவன் நாசமடைவான்" (நீதிமொழிகள் 13:13) என்று வேதம் கண்டித்து உணர்த்துவதைப் போன்றது.

## 3.பிள்ளைகளை பயிற்றுவிப்பதின் மூன்று பலன்கள்
## 3 RESULTS/REWARDS of Training

### அ) ஆத்தும இரட்சிப்பு (Redeemed Soul)

"பிள்ளையை தண்டியாமல் விடாதே; அவனை பிரம்பினால் அடித்தால் அவன் சாகான். நீ பிரம்பினால் அவனை அடிக்கிறதினால் பாதாளத்துக்கு அவன் ஆத்துமாவை தப்புவிப்பாயே" என்று நீதிமொழிகள் 23:13,14ம் வசனங்களில் வாசிக்கிறோம். பிள்ளைகளை கர்த்தருடைய வழிகளில் நடக்க பயிற்றுவிப்பதின் மூலம் நாம் அவர்கள் ஆத்துமா இரட்சிப்படைய ஏதுவுண்டாக்குகிறோம்.

### ஆ) நீதியுள்ள வாழ்வு (Righteous Life)

சரியானப் பயிற்சி நீதியாகிய பலனைத் தரும் (நீதிமொழிகள் 22:15).

### இ) மனம் மகிழும் பெற்றோர் (Rejoicing Parent)

"உன் மகனை சிட்சை செய், அவன் உனக்கு ஆறுதல் செய்வான்; உன் ஆத்துமாவுக்கு ஆனந்தத்தையும் உண்டாக்குவான்" (நீதிமொழிகள் 29:17) என்பது வேத வாக்கு.



# யோபுடைய சரித்திரம் (JOB)

## புத்தக அறிமுகம்

**Rev. Dr. சாமுவேல் ராஜ் R.**

All India National Director, Global University

யோபு, சங்கீதம், நீதிமொழிகள், பிரசங்கி, உன்னதப்பாட்டு ஆகிய ஐந்து புத்தகங்களும் **செய்யுள் ஆகமங்கள் (Poetical Books)** என்றும், **ஞான இலக்கியம் (Wisdom Literature)** என்றும் அழைக்கப்படுகின்றன.

எபிரெய மூலமொழியில் அவை செய்யுள் வடிவில் எழுதப்பட்டவை. பிற்காலத்தில் பல்வேறு மொழிகளில் மொழிபெயர்ப்புச் செய்தபோது அவை உரைநடை வடிவில் மாறிவிட்டன.

கடவுள், மனிதன், கடவுளுக்கும் மனிதனுக்குமுரிய உறவு, ஒழுக்கவிதிகள், அறம் சார்ந்த கருத்துக்கள் ஆகியவற்றை உள்ளடக்கியவையே ஞான இலக்கியமாகும்.

### சரித்திர புருஷன் யோபு

எசேக்கியேல் 14:14-20; யாக்கோபு 5:11 ஆகிய வேதபகுதிகள் யோபு ஒரு சரித்திரப்புருஷன் என்பதை நமக்குச் சொல்லுகின்றன. ஆபிரகாம் வாழ்ந்த காலத்திலோ, அதற்கும் முன்போ ஊத்ஸ் என்ற தேசத்தில் யோபு வாழ்ந்து வந்தான். இன்றைய மத்திய கிழக்கு தேசங்களின் ஒருபகுதியாக இப்பகுதி இருந்திருக்கலாம்.

### செல்வந்தனாகிய யோபு

யோபு மிகப்பெரிய செல்வந்தன். அவன் வாழ்ந்த காலத்தில் ஒருவனுக்கிருந்த நிலபுலன்களும், ஆடு, மாடு, கழுதை, ஒட்டகம் போன்ற மிருகஜீவன்களும், வேலைக்காரரும் அவனது செல்வங்களாகக் கருதப்பட்டன. 7000 ஆடுகளும், 3000 ஒட்டகங்களும், 500 ஏர்மாடுகளும், 500 கழுதைகளும், திரளானப் பணிவிடைக்காரரும் உள்ள செல்வச் சீமானாயிருந்தான் யோபு.

தனது மனைவியுடன், ஏழு ஆண்பிள்ளைகளும், மூன்று பெண் பிள்ளைகளும் அவனுக்கு இருந்தார்கள். என் பாதங்களை நெய்யினால் கழுவினேன் (29:6) என்று சொல்லுமளவிற்கு திரளான செல்வம் அவனுக்கு உண்டாயிருந்தது.

### நீதிமானாகிய யோபு

தேவனோடுள்ள உறவில் அவன் உத்தமனும், சன்மார்க்கனும், தேவனுக்குப்பயந்து, பொல்லாப்புக்கு விலகுகிறவனுமாயிருந்தான். அவரை ஆராதித்தான் (1:5). எந்த இழப்பிலும் கர்த்தரைத் துதித்தான், தன் வாயினால் பாவம் செய்யவில்லை (1:21,22). மேசியாவின் வருகையை எதிர்நோக்கிக் காத்திருந்தான் (19:25). பொறுமையாயிருந்தான் (யாக். 5:11); நீதிமானாயிருந்தான் (எசே.14:14,20).

"தேவனை தூஷித்து ஜீவனை விடும்" என்று அவனைப் பழித்த மனைவியைக் கூட "பைத்தியக்காரி" என்று சொல்லத் துணியாத உத்தமனாயிருந்தான் யோபு, (2:10). தன் பிள்ளைகளுக்கு நல்ல தகப்பனாயிருந்து அவர்களை கர்த்தரைப் பற்றிய பயத்தில் வளர உதவினான் (1:4:5).

கர்த்தர் அவனுக்குக் கொடுத்தவற்றில் தயாளனாயிருந்து பிறருக்கும் கொடுத்து உதவினான் (4:1-4). இளைத்தவனைத் திடப்படுத்தினான். விழுகிறவனை

தன்னுடைய வார்த்தைகளால் நிற்கப்பண்ணி, தள்ளாடுகிற முழங்கால்களைப் பலப்படுத்தினான் (29:12-17). ஏழைகள், அனாதைகள், உதவியற்றவர்கள், விதவைகள், குருடர்கள், சப்பாணிகள், எளியவர்கள், நியாயம் கிடைக்காதவர்கள் என்று அனைவருக்கும் தகப்பனாயிருந்து உதவிசெய்தான் (31:16-32).

### புத்தகத்தின் மையக் கருத்து

யோபுவினுடைய செல்வங்கள் அனைத்தும் அவனைவிட்டு எடுக்கப்பட்டால் அவன் தனது உத்தமத்தில் நிலைநிற்கமாட்டான் என்றும், தேவனை தூஷிப்பான் என்றும் எதிராளியாகிய சாத்தான் கர்த்தரிடம் சவால்விட்டான். கர்த்தரோ யோபுவின் உத்தமத்தைக் குறித்து சாத்தானிடம் சவால்விட்டார். இதில் யார் ஜெயித்தது? யோபு தேவனை தூஷித்தானா? தேவனை ஏமாற்றமடையச் செய்தானா? அல்லது சத்துருவாகிய சாத்தான் தோற்றுப்போனானா? இது யோபுவுக்கு வந்த சோதனை. அந்த சோதனையில் யோபு தன்னுடைய விசுவாசத்தை விடவில்லை. தேவனுக்கு கடைசிவரை உண்மையாயிருந்தான். இதுவே **இப்புத்தகத்தின் சாரம்** எனலாம்.

## யோபுவுக்கு வந்த ஐந்து சோதனைகள்

### 1. செல்வங்கள் அழிந்தன

அவனுடைய செல்வங்களெல்லாம் ஒரேநாளில் அழிந்தன. எதிராளியான பிசாசின் செயலால் சபேயர், கல்தேயர் என்னும் கொள்ளைக்காரர்கள் வந்து ஆடுகள், ஒட்டகங்கள், எருதுகள், கழுதைகள் ஆகியவற்றைக் கொண்டு சென்றனர். பிற மிருகஜீவன்கள்மேல் மின்னல் விழுந்து அவை அழிந்தன.

### 2. பிள்ளைகள் செத்தார்கள்

சாத்தானின் செயலால் பெருங்காற்று வீட்டின்மேல் மோதி அடிக்க, ஒரேவீட்டில் சேர்ந்து விருந்துண்டு கொண்டிருந்த யோபுவின் பத்துப் பிள்ளைகளும் ஒரே நேரத்தில் செத்துப்போனார்கள். ஒரேநாளில் அவன் கண்களுக்கு முன்பாகப் பத்து சவப்பெட்டிகள்!

செல்வங்கள் அழிந்தாலும், பிள்ளைகளிருந்தால் மீண்டும் சம்பாதித்துக் கொள்ளலாம்; ஆனால் இப்பொழுதோ, அந்த நம்பிக்கையும் இல்லாமற்போய் விட்டது.

### 3. வியாதி

தோலைவெடிக்கச் செய்யும் கொடியப் பருக்களால் உள்ளங்கால் தொடங்கி, உச்சந்தலைமட்டும் யோபு வாதிக்கப்பட்டான்,(2:5). பருக்களிலிருந்து சீழ்வடிந்து கொடிய துர்நாற்றம் உண்டாயிற்று,(19:17). அழுது அழுது அவனது முகம் அழுக்கடைந்தது,(16:16). வியாதியினால் மிகவும் மெலிந்து எலும்பும் தோலுமாக மாறினான்,(20:20). சொந்தபந்தங்கள் அவனை விட்டு விலகிச் சென்றனர் (19:13,14).

### 4. மனைவியின் அன்பை இழந்தான்

அவனுடைய பெருந்து ன்ப நேரத்தில் அவன் மனைவியை எதிரிடையாய் ஏவிவிட்டு, தேவன்மேல் யோபு வைத்திருந்த விசுவாசத்திலிருந்து அவனை சறுக்கச் செய்ய சாத்தான் செயல்பட்டான். எந்தவொரு மனைவியும் தனது கணவன் செல்லும் கடினப் பாதையில் அவனுக்கு ஆறுதலாகவும் ஆதரவாகவும் இருக்க வேண்டும். ஆனால் இவளோ அவனுடைய இக்கட்டுக் காலத்தில் அவனைக் கைவிட்டாள்.

### 5. நண்பர்களின் அன்பை இழந்தான்

**எலிப்பாஸ், பில்தாத், சோப்பார்** என்ற அவனுடைய நண்பர்கள் யோபுவுக்கு ஆறுதல் சொல்ல வந்தார்கள். இவர்கள் அன்றைய உலகம் அறிந்த இறையியல் வல்லுநர்கள். அவனது துக்கம் மகாக்கொடியது எனக்கண்டு, ஒருவரும்

ஒருவார்த்தையும் பேசாமல் இரவுபகல் ஏழுநாள் அவனோடேகூடத் தரையிலே உட்கார்ந்திருந்தனர்.

இப்படிப்பட்ட நெருங்கிய நண்பர்கள் தங்கள் வாய்திறந்து பேச ஆரம்பித்தபோது அவன் துன்பத்துக்கு அறிவுபூர்வமானத் தீர்வுகாண முயன்றனர். விவாத விமர்சன வார்த்தைகளை அள்ளிக்கொட்டினர். அவனை பாவி, கொடுமைக்காரன், மாய்மாலக்காரன் என்று பழி சாட்டினர்.

இவர்கள் மூவரும் தங்கள் வாதத்தை எடுத்துரைத்து முடித்தபோது நான்காவதாக வந்த எலிகூ என்பவன் பேசத் தொடங்கினான். யோபுவுக்கு வந்த பாடுகள் அவனைத் தண்டிப்பதற்காக அல்ல; மாறாக, திருத்துவதற்காகவே தேவன் தந்தார் என்றான்.

சாத்தான்தான் யோபுவின் பாடுகளுக்குக் காரணம் என்பதை இவர்கள் நான்குபேரும் விளங்கிக் கொள்ளவில்லை. கிட்டத்தட்ட ஒருவருடகாலம் யோபுவின் வீட்டிலேயே தங்கி, அவன் வீட்டில் உணவருந்தி அவனை குறைகூறி விவாதத்தில் வெற்றிபெற முயன்றனர்.

## யோபுக்கு தேவன் உத்தரவு கொடுத்தல்

யோபுவும் நண்பர்களும் பேசிய விவாதத்தால் முடிவு ஒன்றும் எட்டாத நிலையில் தேவன்தாமே இறங்கிவந்து பிரச்சனையை முடிவுக்குக் கொண்டுவந்தார்.

யோபு புத்தகம் முழுவதிலும் 225 கேள்விகள் வருகின்றன. அதில், 38 முதல் 42 வரையுள்ள அதிகாரங்களில் தேவன் கேட்கும் கேள்விகளாக 77 கேள்விகள் தரப்பட்டுள்ளன. எனது சிருஷ்டிப்பின் மகத்துவத்தை நீ விவரிக்க இயலுமா? எனது சிருஷ்டியை மேற்பார்வையிட்டும் பராமரிக்க உன்னால் இயலுமா? எனது சிருஷ்டிகளைக் கீழ்படுத்தி ஆள உன்னால் ஆகுமோ? என்பவைதான் தேவன் யோபுவிடம் கேட்ட கேள்விகளின் சாராம்சம். தேவன் கேட்ட கேள்விகளுக்கு முன்பாக யோபுவின் கேள்விகளெல்லாம் அர்த்தமற்றவை யாகிவிட்டன.

இப்பொழுது யோபுவுக்கு தேவனுடைய தரிசனமும், வெளிப்பாடுகளும் மட்டுமே போதுமானதாகவும், அவனுடைய பாடுகளுக்கு முடிவாகவும் அமைந்தன.

நாம் அமைதியாக இருக்கும்போதுதான் தேவன் நமக்காக வைத்திருக்கும் மிகப்பெரியத் திட்டங்களைச் செய்து நிறைவேற்ற முடியும். எனவே, பாடுகளின் காலத்தில் வாய்மூடி அமர்ந்திருந்திருத்தல் மிகப் பெரியபக்தியின் வெளிப்பாடாக அமையும்.

## யோபுவுக்கு கிடைத்த மறுவாழ்வு
## யோபுக்கு தேவன் உத்தரவு கொடுத்தல்

தேவன் யோபுவுக்கு கொடுத்த மறுவாழ்வில் ஐந்து ஆசீர்வாதங்கள் அங்கியிருந்தன.

1. தேவன் யோபுவுக்குத் தம்மை வெளிப்படுத்தினார்; அவன் கண்கள் திறக்கப்பட்டது; தேவனைக் கண்டான். இது ஒன்றுபோதுமே! (42:5).
2. இரட்டிப்பான ஆசீர்வாதங்கள், (42:10). யோபுவின் சிறையிருப்பு மாற்றப்பட்டது.
3. ஒப்புரவாகுதலின் ஆசீர்வாதம் (42:11). அவன் நண்பர்களும், சகோதர சகோதரிகளும் யோபுவுடன் ஒப்புரவாகி அவனுடன் சேர்ந்து விருந்துண்டனர்.
4. யோபுவுக்கு ஏழு குமாரரும், மூன்று குமாரத்திகளும் பிறந்தனர், பரலோகத்தில் பத்து, பூவுலகில் இன்னும் பத்துப் பிள்ளைகள்! யோபுவின் பெண்பிள்ளை களுக்குச் சூட்டப்பட்ட பெயர்கள் ஆவிக்குரிய அர்த்தமுடையவை (42:14):

**எமீமா**=புறா அல்லது பிரகாசமான எதிர்காலம். **கெத்சியாள்**=லவங்கப்பட்டை, வாசனைத்திரவியம் (சாட்சியின் வாழ்க்கை). **கேரேனாபுக்**=அஞ்சனக்குடுவை (பயனுள்ளப் பாத்திரம்).

5. நீண்ட பூரண ஆயுள், (42:16,17) ஐந்து சோதனைகளுக்குப் பின்பு ஐந்து ஆசீர்வாதங்கள் யோபுவுக்குக் கிடைத்தது அருமை, அருமையிலும் அருமை: பக்தி வாழ்வே மேலானது. பரிசுத்தப் பாதையே நேரானது. எந்த சூழ்நிலையிலும் கர்த்தரை அண்டிக்கொண்டிருப்பதே பாக்கியம்.

## யோபு புத்தகத்தின் பொருளடக்கம்

1. நீதிமானும் செல்வந்தனுமாயிருந்த யோபு, 1:1-5
2. யோபு தேவனை தூஷிக்கும்படி சாத்தான் அவனுடைய ஆசீர்வாதங்களை யெல்லாம் பறித்தெடுத்தல் 1:6-2:13.
3. யோபுவும் மூன்று நண்பர்களும் துன்பத்தின் காரணங்களை ஆராய்ந்து பார்த்தல் 3:1- 37:40.

## நீண்ட சம்பாஷனை, விவாதங்கள்

- முதலாம் சுற்று, அதி. 3-14.
- இரண்டாம் சுற்று, அதி. 15-21.
- மூன்றாம் சுற்று, அதி. 22-31.

4. எலிகூ என்ற நாலாம் நபரின் பேச்சு, அதி. 32-37.
5. தேவன் யோபுவுடன் பேசுதல், அதி. 38-41.
6. திரும்பவும் மீட்டெடுக்கப்பட்ட யோபுவின் ஆசீர்வாதங்கள், அதி. 42.

இப்புத்தகத்திலுள்ள 42 அதிகாரங்களில் 1,2,42 ஆகிய அதிகாரங்கள் மட்டுமே உரைநடையில் தரப்பட்டுள்ளன. மற்றப் பகுதிகள் செய்யுள் நடையிலான விவாதங்களும் விளக்கங்களாகவும் அமைந்துள்ளன.

## யோபு புத்தகம் நமக்குத் தரும் செய்தி

மனித சிருஷ்டி கர்த்தராகிய தம்மை நம்பவேண்டும் என்றும் பரிசுத்தமாய் வாழவேண்டும் என்றும் தேவன் எதிர்பார்க்கிறார். எனினும் மனுக்குலத்துக்கு எதிராக செயல்படுகிற எதிரி ஒருவன் இருக்கிறான். அவன் **சாத்தான்** என்று அறியப்படுகிறான். மனுக்குலத்துக்கு பாடுகளும், துன்பங்களும் இந்த சத்துருவினால் வருகிறது. ஆனால் தனக்கு வரும் துன்பத்துக்குரிய காரணம் என்னவென்று தேவனைச் சார்ந்து வாழும் ஒரு பக்தனுக்குத் தெரிவதில்லை. அதுபுரியாத புதிராக வைக்கப்பட்டுள்ளது. பாடுபடும் பரிசுத்தவானையும் அவனது சூழ்நிலையும், புரிந்துகொள்ள எவராலும் இயலவில்லை. பிரச்சனையை மேலோட்டமாகவோ அல்லது பாடுகளின் ஒருபக்கத்தை மட்டுமோ பார்க்கும் பிறர். நெருங்கிய நண்பராயிருந்தாலும் வாழ்க்கை துணையாயிருந்தாலும் தங்கள் அறியாமையையே வார்த்தைகளாக வெளிப்படுத்துகின்றனர். எனினும் பாடுபடும் பக்தன் ஒருவன் தனது பாடுகளின் மத்தியிலும் தன்னைப் படைத்தவரும், பராமரித்து வருகிறவருமாகிய தேவன், ஒருவர் உண்டு என்பதை நம்பவேண்டும். அவருக்குப் பயப்படவேணடும்; இதுதான் யோபுடைய சரித்திரம் நமக்குத்தரும் செய்தியாகும். யோபுவின் உத்தமம் உறுதியானது என்பதை சாத்தானுக்கும் புரியவைப்பதே யோபுவுக்கு வந்த பாடுகளின் நோக்கம். அதன்மூலம் அன்றும், இன்றும், என்றும் பாடனுபவிக்கும் பக்தர் அனைவருக்கும் யோபு நல்ல ஒரு எடுத்துக்காட்டாக இருக்கும்படியே இப்புத்தகம் எழுதப்பட்டது எனலாம்.



# தலைமைத்துவம்

## (Leadership)

**Dr. L. ஜெயபாலன்**
முன்னாள் முதல்வர், தமிழ்நாடு வேதாகம கல்லூரி

பரிபூரண ஜீவன் பத்திரிக்கை மூலமாக உங்களை சந்திப்பதிலே மிக்க மகிழ்ச்சியடைகிறேன். ஒருவனுக்கு ஆர்வம் தேவை, இந்த ஆர்வம் சிறுவயதிலேயே உருவாகலாம், பெற்றோர் கொடுக்கும் வேலைகள், பள்ளி, கல்லூரியில் கொடுக்கப்படும் கடமைகள் தலைமைத்துவத்திற்கு வழிவகுக்கும். ஆர்வமுள்ள ஒருவர் தனது கடமையை சரிவர செய்யும்பொழுது பிற்காலத்தில் சிறந்த தலைவராக கடவுளுடைய அருளால் உருவாக முடியும்.

**சிறு காரியங்களில் உண்மையாக இருந்தல்**
**Be Faithful in small things**

“தன் வேலையில் ஜாக்கிரதையாயிருக்கிறவனை நீ கண்டால், அவன் நீசருக்கு முன்பாக நில்லாமல், இராஜாக்களுக்கு முன்பாக நிற்பான்” (நீதி.22:29).

வகுப்பறையில் மாணவர்களை கண்காணித்தல், சபையின் வாகனத்தை ஓட்டுதல், ஞாயிறு பள்ளியில் சரியாக ஆயத்தம் செய்து போதித்தல், பராமரிப்புக் குழுவில் தலைவராக செயல்படுதல் போன்றவைகளாக இருக்கலாம். “எதைச் செய்தாலும், மனுஷருக்கென்று செய்யாமல் கர்த்தருக்கென்று செய்யுங்கள்” (கொலே.3:22-24).

**a) Responsibility- பொறுப்புணர்ச்சி**

**Conciousness** -தலைவன் இல்லாத சமயத்திலும் நூனின் குமாரனாகிய யோசுவா (Servant) ஆசரிப்புக் கூடாரத்தை விட்டு பிரியாதிருந்தான்.

**He was a Servant** - வேலைக்காரன் - யோசுவா (யாத்.36:11).

**He became a Soldier** - வீரனாக மாறினான் (யாத்.17:10).

யோசுவா தனக்கு மோசே சொன்னபடியேசெய்து அமலேக்கோடே யுத்தம் பண்ணினான்.

**He became the Saviour** ...வெற்றி வேந்தனாக நியமிக்கப்பட்டான். “அவன் மேல் தன் கைகளை வைத்து கர்த்தர் தனக்குச் சொன்னபடியே அவனுக்கு கட்டளை கொடுத்தான்” (எண். 27:23).

மோசே ...யோசுவாவின் மேல் தன் கைகளை வைத்தபடியினால் அவன் ஞானத்தின் ஆவியினால் நிறையப்பட்டான். இஸ்ரவேல் புத்திரர் அவனுக்குக் கீழ்ப்படிந்து கர்த்தர் மோசேக்கு கட்டளையிட்டபடியே செய்தார்கள் (உபாகமம் 34:9).

**b) Obedience- கீழ்ப்படிதல்**

எவ்வித கேள்வி கேட்காமல் உடனே கீழ்ப்படிதல். ஒரு இராணுவத்தில் (கேப்டன்) தலைவன் ஒரு காரியத்தை சொல்லும்போது இராணுவ வீரன் எவ்வித கேள்வியுமின்றி, தனது உயிரை பணயம்வைத்து கீழ்ப்படிய வேண்டும், இயேசுவின் தாயாகிய மரியாள், வேலைக்காரரை நோக்கி அவர் உங்களுக்கு

என்ன சொல்லுகிறாரோ அதன்படி செய்யுங்கள் என்றாள் (யோவான் 2:5). "அவர்கள் நிரப்பினார்கள், கொண்டுபோனார்கள்" என வேதம் சொல்லுகிறது. தண்ணீரால் நிரப்பினார்கள் இயேசுவோ அதை திராட்ச ரசமாக மாற்றினார்.

**c) Duty - கடமை**

இது ஒருவரை செயலுக்குள் நடத்தும். சொல்லப்பட்டதை மனதில் மட்டும் வைக்காமல் செயல்முறையில் வெளிப்படுத்துவதாகும். "கர்த்தர் தனக்குக் கற்பித்தபடியெல்லாம் மோசே செய்தான்" (யாத். 40:16).

யாத்.40-ம் அதிகாரத்தில் 7 தடவைமேல் கூறப்பட்ட வாக்கியம் வருகின்றது (யாத்.40:16,19, 22, 24, 26, 28, 32).

**மேற்சொல்லப்பட்ட மூன்று காரியங்கள் மோசேயின் (ROD) கோலின் அடிப்படையில் கூறப்பட்டுள்ளது**

**R - Responsibility –** பொறுப்பு

**O- Obedience -** கீழ்ப்படிதல்

**D -Duty –** கடமை

தலைமைத்துவத்தில் கடவுளை மட்டும் பிரியப்படுத்துங்கள். எல்லோரையும் பிரியப்படுத்த முயற்சி செய்யாதிருங்கள். இவ்வுலகில் அநேகர் தங்களது வேலையில் தனக்கு ஒரு தத்துவத்தை பின்பற்றுபவர்களாக இருப்பார்கள். "நான் பிந்தி வருவேன். "நான் முன்கூட்டியே சென்றுவிடுவேன். ஆள் இருந்தால் வேலை செய்வேன் ஆள் இல்லாவிட்டால் வேலையை செய்யமாட்டேன்".

ஒரு குறிப்பிட்ட தலைவராக இருந்த ஒருவர், முன் தலைவராக இருந்தவருக்கு மரணதண்டனை விதித்தார். அவரை காப்பாற்ற ஒரு குறிப்பிட்ட தேசத்தலைவர் பெறும் முயற்சி செய்தார். "நான்குபேர்கள் மரணதண்டனையை எதிர்நோக்கியுள்ளனர். ஒருவரை விடுதலைசெய்து மூவரை தூக்கிலிடமுடியாது என நால்வரையும் தூக்கிலிட்டார்". அவர் சொன்ன வார்த்தை "The Higher the authority The harder you become"அதிகாரத்தின் உச்சக்கட்டத்தில் இருக்கும்பொழுது மனதை கடினப்படுத்தியே ஆக வேண்டும்.

தொடரும்...


அக்டோபர் 2 திங்கட்கிழமை

காலை 9.00 மணி

ஏ.ஜி.கேம்ப் சைட் மதுரை

முன்பதிவு கட்டணம் ரூ.100/-

ஆண்கள் ஐக்கிய 14-வது மாநில முகாம்

வாழ்த்துரை : Rev.ஸ்டீவ் ஜெயராஜ்

செய்தியாளர் : Rev.Dr.V.T.ஆபிரகாம்

சிறப்பு ஆராதனை : Pr.ரீகன் கோமஸ்

குடும்பங்களுக்கான ஆலோசனை: Rev.ஸ்டேன்லி மாணிக்கராஜ்

கருப்பொருள்

"கிறிஸ்துவுக்குள் சுதந்திரம்" (எபே.1:12).

## உங்கள் ஆவிக்குரிய வாழ்வின் நிலையை சோதித்தறியுங்கள்!!

| ஆரோக்கியமான ஆவிக்குரிய வாழ்க்கை | ஆரோக்கியமற்ற ஆவிக்குரிய வாழ்க்கை |
|---|---|
| ஊக்கமான ஜெபம் | மந்தமான ஜெபம் |
| வேதம் வாசித்தல் இனிமையானது | ஆர்வமில்லாத வேத வாசிப்பு |
| கர்த்தரில் முழுமையான நம்பிக்கை கொண்டிருத்தல் | பதட்டத்துடனும், சந்தேகத்துடனும் இருத்தல் |
| மற்றெல்லாவற்றையும் விட கர்த்தரை சேவித்தல் | கர்த்தரைவிட இவ்வுலக காரியங்களை அதிகமாக நேசித்தல் |
| பாவத்தை எதிர்த்தலும் வெறுத்தலும் | பாவத்தோடு சமரசம் செய்தல் |
| அனைத்திலும் தேவனை மகிமை அடையச் செய்தல் | அனைத்திலும் தற்பெருமையைத் தேடுதல் |
| இருதயத்தில் சமாதானத்துடன் இருத்தல் | இருதயத்தில் கவலை கொள்ளுதல் |
| அனைத்திலும் நன்றி செலுத்துதல் | எப்பொழுதும் முறுமுறுத்தல் |
| எப்போதும் மகிழ்ச்சியுடன் பாடிக்கொண்டிருத்தல் | எப்போதும் வருத்தத்துடனும் பெருமூச்சுடனும் இருத்தல் |
| உபத்திரவத்தில் அமைதியுடனும் பொறுமையுடனும் இருத்தல் | எளிதில் கோபம் கொள்ளுதல் |
| மற்றவர் நலத்தில் கருத்துடன் இருத்தல் | சுயநலத்தில் கருத்தாய் இருத்தல் |
| அனைத்திலும் தேவனுக்குரியதைத் தேடுதல் | எப்போதும் சுகபோக நாட்டத்துடன் இருத்தல் |
| ஆவிக்குரிய காரியங்களில் வாஞ்சையுடன் இருத்தல் | இதயத்தில் இவ்வுலக காரியங்களை இச்சித்தல் |
| பிறரைத் திடன் கொள்ளச் செய்யும் வார்த்தைகளைப் பேசுதல் | பிறரைக் குறை கூறும் வார்த்தைகளைப் பேசுதல் |
| கிறிஸ்துவுக்கு சாட்சி பகருவதில் மகிழ்ந்திருத்தல் | சாட்சியாய் இருக்க வல்லமை இழந்து கவலைப்படுதல் |
| கர்த்தரின் ஊழியத்திற்கு உற்சாகத்துட னும் மகிழ்ச்சியுடனும் கொடுத்தல் | உற்சாகமில்லாமலும், விருப்பமற்று கொடுத்தல் |
| பிறர் வெற்றியடையும்போது களிகூறுதல் | பிறர் வெற்றியைப் பார்த்து பொறாமை கொள்ளுதல் |
| பிறரின் துன்பத்தில் உதவிக்கரம் நீட்டுதல் | பிறர் துன்புறும் போது கண்டு கொள்ளாமலிருத்தல் |
| மன்னித்தலை விரும்புதல் | மன்னிக்க விரும்பாமலிருத்தல் |
| குணநலனுக்கு (நல் நடத்தைக்கு) முக்கியத்துவம் அளித்தல் | உடுத்துதலுக்கு முக்கியத்துவம் அளித்தல் |
| பிற பக்தியுள்ள கிறிஸ்தவர்களுடன் ஐக்கியம் கொள்ளுதல் | உலக பிரமான நண்பர்களுடன் நட்புக்கொள்வதில் மகிழ்ச்சியடைதல் |
| கடிந்து கொள்ளுதலை மகிழ்வுடன் ஏற்றுக்கொள்ளுதல் | புகழ்ந்து பேசும் வார்த்தைகளை மட்டும் விரும்புதல் |
| கர்த்தரின் வருகையை ஆவலுடன் எதிர்பார்த்திருத்தல் | கர்த்தருடைய வருகையைக் குறித்து சிறிதும் சிந்திக்காது இருத்தல் |



# அபிஷேகம்

Rev.P. பெஞ்சமின் பிரபாகரன்

மத்திய மண்டல ஆண்கள் ஐக்கிய ஒருங்கிணைப்பாளர்

## அந்த அபிஷேகம் சகலத்தையும் குறித்து உங்களுக்கு போதிக்கிறது

(1 யோவான் 2:27)

கிறிஸ்துவுக்குள் அன்பான புருஷர்கள் யாவருக்கும், ஆண்கள் ஐக்கியத்தின் சார்பாக இயேசுவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். பொதுவாகவே, திருமணமான ஆண்களுக்கு யாராவது புத்திசொன்னாலோ, போதித்தாலோ, அறிவுரை கூறினாலோ சற்றே அசட்டை செய்வார்கள். ஏனெனில் எப்பொழுதுமே ஆண்கள் பிறருக்கு புத்திசொல்வதையே விரும்புவார்கள். அது இரட்சிக்கப்பட்டவர்களானாலும் இரட்சிப்படாதவர்களானாலும் வித்தியாசமில்லை.

ஆனால் சபைக்குள் இருக்கும் ஆண்களுக்கு கர்த்தர் கொடுக்கிற அபிஷேகமே போதிக்கும். யோவான் 2:27-ல் நீங்கள் அவராலே பெற்ற அபிஷேகம் சகலத்தையும் குறித்து உங்களுக்கு போதிக்கிறது. அது சத்தியமாயிருக்கிறது. பொய்யல்ல, அது உங்களுக்கு போதித்தபடியே அவரில் நிலைத்திருப்பீர்களாக என்று அப்போஸ்தலனாகிய யோவான் குறிப்பிடுகிறார். இந்த அபிஷேகத்தின் போதனைக்கும், உபதேசத்திற்கும் செவிகொடுத்தே ஆகவேண்டும். இல்லையெனில் அதற்கான விளைவை சந்திக்க வேண்டியதாயிருக்கும்.

இன்று நமது சபைகளிலே இருக்கும் ஆண்களில் எத்தனைபேர் இந்த அபிஷேகத்தை பெற்றுக் கொண்டுள்ளனர். எத்தனைபேர் பெற்றுக்கொண்ட அபிஷேகத்தில் நிலைத்திருக்கின்றனர் என்று பார்த்தால் குறைவுதான். 100 புருஷர்கள் இருக்கும் இடத்தில் 30-35 பேர் மட்டுமே அபிஷேகம் பெற்றவர்களாய் இருக்கின்றனர். அதுவே 30 பேர் உள்ள சபைகளில் 10 பேர்கூட அபிஷேகம் பெற்றவர்கள் இல்லை என்பதே உண்மை. அபிஷேகம் பெற்றவர்களில் கூடபெண்களே அதிகம். இந்த நிலைமை மாறவேண்டும்.

இன்றைய ஆண்கள் ஞாயிறு ஆராதனையில் பங்குபெறுவதும், ஆராதனை முடியும்வரை சபைக்குள் இருப்பதையே ஒரு பெரிய சாதனையாக கருதுகின்றனர். அதிலேயே திருப்திப்பட்டுக் கொள்கின்றனர். 20 ஆண்டுகளுக்கு முன்சபைகளில் அங்கம் வகித்த ஆண்கள் சபைகளில் நடக்கும் அத்தனை கூட்டங்களிலும் பங்குபெறுவதை பாக்கியமாக கருதினர். காரணம் அனைவரும் அபிஷேகம் பெற்றிருந்தனர். பெற்றுக்கொள்வதில் வாஞ்சையாயிருந்தனர்.

ஆண்கள் ஐக்கியத்தின் தரிசனமே, ஒரு புருஷனானவன் தனிப்பட்ட ஜீவியத்தில் தேவனுக்கும் அவனுக்கும் நல்ல உறவு இருக்க வேண்டும். குடும்பத்தை நடத்தும் நல்ல தலைவனாக இருக்க வேண்டும். சபைக்கு நல்ல தூணாக இருக்க வேண்டும். சமுதாயத்திற்கு நல்ல சாட்சியாக இருக்க வேண்டும். தேசத்திற்கு எழுப்புதலின் பாத்திரமாய் இருக்க வேண்டுமென்பதே. இந்த ஐந்து காரியங்களும் உங்கள் மூலம் நிறைவேற ஆவியின் அபிஷேகம் அவசியமல்லவா?

சகோதரரே! புருஷர்களே!, கவனமாயிருங்கள். அபிஷேகத்தை குறித்து அலட்சியமாய் இருந்து விடாதீர்கள். அபிஷேகம், அந்நியபாஷை, இவைகளை குறித்த கள்ள உபதேசங்கள் காலங்காலமாய் எவனை விழுங்கலாமோவென்று, சபைகளை

சுற்றிவருகிறது. (1பேதுரு5:8). சிக்கிக்கொள்ளாதிருங்கள், தேவசிலாக்கியத்தை இழந்துவிடாதீர்கள்.

பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தை பெற்றுக்கொண்ட ஒரு புருஷனுக்கு அந்த அபிஷேகமே போதிக்கிறது. வேறுயாரும் போதிக்க வேண்டியதில்லை. "அபிஷேகம் பெற்ற ஒருவரை பார்த்து, சபைக்கு போங்கள், பரிசுத்தமாயிருங்கள், ஊழியம் செய்யுங்கள், தசமபாகம் கொடுங்கள் என்று எவரும் சொல்லவேண்டியதில்லை". அவர்கள் பெற்றுக்கொண்ட அபிஷேகமே இவைகளை போதிக்குமே.

**அபிஷேகம் எதை போதிக்கும்:**

1. ஓய்வுநாளை (ஞாயிறு ஆராதனை) பரிசுத்தமாய் ஆசரிக்க போதிக்கும் (யாத்:20:11).
2. சபை கூடிவருதலை விட்டுவிடாதிருக்க போதிக்கும் (எபிரெயர் 10:25; ரோமர் 12:8).
3. கர்த்தருடைய பந்தியை அசட்டை செய்யாதிருக்க போதிக்கும் (யோவான் 6:53,54).
4. கர்த்தருக்குள் நிலைத்திருந்து கனிகொடுக்க போதிக்கும் (யோவான் 6:56; 15:5; மத்தேயு 7:19).
5. ஆத்தும ஆதாயம் செய்ய போதிக்கும் (அப்.8:4; 2 தீமோ.4:5).
6. குடும்பத்தை நன்றாய் நடத்தவும், சாட்சியாக ஜீவிக்கவும் போதிக்கும் (1 தீமோ.5:8; எபேசியர் 6:4).
7. கடன் வாங்காதே என்று போதிக்கும் (லூக்கா 14:28,30; நீதி. 22:7; ரோமர் 15:8).
8. வாங்கிய கடனை மறக்காமல் திருப்பிக் கொடுக்க போதிக்கும் (சங்கீதம் 37:21).
9. பிரச்சனைகள், போராட்டங்கள் வரும்போது கர்த்தரை சார்ந்துகொள்ள போதிக்கும் (ஆதி. 32:26).
10. எந்த காரியத்திலும் கர்த்தருடைய சித்தம் அறிய போதிக்கும் ( 1 தெச. 5:18; ஏசாயா 48:14; 1 யோவான் 2 : 17).

இப்படி சொல்லிக்கொண்டே போகலாம். ஏனெனில் அபிஷேகம் பெற்றவர்களுக்கு யாரும் போதிக்க வேண்டியதில்லை. அந்த அபிஷேகத்தின் ஆவியானவரே போதிப்பார். (யோவான் 16:13). "அபிஷேகம் பெற்ற சகோதரன் ஒருவன் இவைகளை செய்ய தவறுவாரானால் அவர் பெற்ற அபிஷேகத்தை சற்றே ஆராய்ந்து பார்ப்பது நல்லது".

போதகர்களே, போதகப் பிதாக்களே, நம்முடைய திருச்சபைகளில் அபிஷேகம் பெற்றவர்களைவிட, அபிஷேகம் பெறாத சகோதரர்களே ஊழியத்திலும், உதவி செய்வதிலும், ஒத்துழைப்பதிலும் உற்சாகமாய் இருப்பார்கள். அதிலே நாம் திருப்தி அடைந்து விடவேண்டாம். ஏனெனில் அவர்கள் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க, ஆவியினால் பிறந்திருக்க வேண்டும். இந்த ஆண்டு ஆண்கள் முகாமில், நமது சபைகளில் அங்கத்தினர்களாயிருக்கிற புருஷர்கள் யாவரும் பரிசுத்த ஆவியின் நிறைவையும், அபிஷேகத்தையும் பெற்றுக்கொள்ள வாஞ்சிப்போம். ஜெபிப்போம்.

தமிழ் பிரதேச A.G சபைகளின் ஆண்கள் யாவரும் அபிஷேகம் பெற்றுவிட்டால், அதுவே நமது சபைகளுக்கு எழுப்புதலை கொண்டுவரும். திரும்பவும் ஒரு அசூசா தெரு எழுப்புதலை நம்முடைய ஸ்தாபனமும் காணும் (அப்.2:1-4).

**புருஷர்களே நீங்கள் அபிஷேகம் பெற்றுவிட்டால்:**

1. நீங்கள் ஆசீர்வதிக்கப்படுவீர்கள்.
2. உங்கள் குடும்பம் ஆசீர்வதிக்கப்படும்.
3. உங்கள் சபை ஆசீர்வதிக்கப்படும்.
4. உங்களை சுற்றியுள்ள சமுதாயம் (ஊர்) ஆசீர்வதிக்கப்படும்.
5. உங்கள் தேசம் ஆசீர்வதிக்கப்படும்.

கர்த்தர் அப்படியே செய்வாராக.



# தேவனுடைய நோக்கமும் திட்டமும்


## Dr. ராணி ஜெயச்சந்திரன்

நிர்வாகக்குழு உறுப்பினர், தமிழ் பிரதேசப் பெண்கள் ஊழியம்


ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் பரிபூரண ஜீவன் வாசகர்கள் அனைவருக்கும் அன்பின் வாழ்த்துக்கள்...

கடந்த மாதத்தில் பாவம் செய்து பிசாசுக்கு சொந்தமான மனிதனை மீட்டெடுத்து, மீண்டுமாக தமக்கு சொந்தமாக மாற்றிக்கொள்ள தேவன் எடுத்த திட்டம் தான் இரட்சிப்பு என்று நாம் தியானித்தோம். தேவனுடைய முழுமையான இரட்சிப்பு என்றால் என்ன? நாம் எதற்காக இரட்சிக்கப்பட வேண்டும்? எதிலிருந்து இரட்சிக்கப்பட வேண்டும்? நாம் இரட்சிக்கப்பட்டு எங்கே போக போகிறோம்? தேவன் நம்மை எதற்காக இரட்சிக்க விரும்பினார்? நம்மை இரட்சிக்க யாரால் முடியும்? தேவன் நம்மை எப்படி இரட்சித்தார்? இரட்சிப்பு நிறைவேற நாம் என்ன செய்ய வேண்டும்? இதை குறித்து வருகிற நாட்களில் தியானிக்க இருக்கிறோம்.

இந்த உலகத்தில் மனிதனை உருவாக்குவதற்கு முன்னமே தேவன் நம்மை தெரிந்தெடுத்தார் என்று வேதம் சொல்கிறது. 1.உலகத்தோற்றத்திற்கு முன்னே கிறிஸ்துவுக்குள் நம்மைத் தெரிந்து கொண்டார் (எபேசியர் 1:4). 2.நம்மை சுவிகாரபுத்திரராகும்படி முன்குறித்தார் (எபேசியர் 1:6) அதில் ஒரு சிலரை தேவன் தெரிந்து கொள்கிறார். ஏன் ஒரு சிலரை மாத்திரம் தேவன் தெரிந்து கொள்கிறார் என்று அவரைக் கேள்வி கேட்க நம்மால் முடியாது. ஆனால் எத்தனையோ ஜனங்கள் இருக்கும் பொழுது நம்மை தெரிந்து கொண்டதற்காக அவருக்கு நன்றி செலுத்த வேண்டும்.

நாம் நல்லவர்களாய் இருப்பதினால் நம்மை தெரிந்து கொள்ளவில்லை. ரோமர் 9:13-ல் ஏசாவை வெறுத்தேன், யாக்கோபை தெரிந்து கொண்டேன் என்று சொல்கிறார். வெறுப்பதும் தெரிந்து கொள்வதும் அவருடைய சித்தம். நம்மை தெரிந்து கொள்வதற்கு அவர் சித்தம் கொண்டதற்காக அவருக்கு நன்றி செலுத்த வேண்டும். நம்மை தெரிந்து கொண்டது மாத்திரமல்ல, உலகத் தோற்றத்திற்கு முன்னே நம்மை முன் குறித்தார் என்று வேதம் சொல்கிறது. முன் குறித்தல் என்றால் நம் மேல் ஒரு அடையாளம் போட்டு இருக்கிறார். நம்மேல் இருக்கிற அடையாளம் நமக்குத் தெரியாமல் இருக்கலாம். ஆனால் அந்த அடையாளம் தேவனுக்கு தெரியும். தூதர்களுக்கு தெரியும், ஏன் பிசாசுக்கு கூட தெரியும். உலகத் தோற்றத்திற்கு முன்பே ஒருவரையும் உருவாக்குவதற்கு முன்பாகவே அந்த அடையாளம் நம்மேல் போடப்பட்டுள்ளது. அந்த அடையாளம் எதற்காக தெரியுமா? அவரை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும், அவருடைய ஜீவன் நமக்குள்ளாக வர வேண்டும், அவருடைய ஆளுகையும் வரவேண்டும். அது மாத்திரமல்ல, அவரை நாம் வெளிப்படுத்த வேண்டும். எதற்காக நம்மைத் தெரிந்துகொண்டு முன் குறித்தார். என்றால் எபேசியர் 1:6ல் சொல்லப்பட்டது போல அவருக்கு சுவிகாரபுத்திரராகும்படி முன் குறித்தார். பிள்ளையாய் மாத்திரமல்ல நாம் வளர்ந்து அவருடைய சுதந்திரத்தை அனுபவிக்கக்கூடிய ஸ்தானத்திற்கு வர வேண்டும். எவ்வளவு மேன்மையான வாழ்க்கையை தேவன் நமக்கு கொடுத்திருக்கிறார். பிசாசு மனிதனை வஞ்சித்ததினால் அவன் பிசாசுக்கு சொந்தம் ஆகிறான். யோவான் 8:44ல் வேதம்

சொல்கிறது. நீங்கள் உங்கள் பிதாவான பிசாசினால் உண்டானீர்கள் என்று அவருடைய பிள்ளையாக இருக்கும்படி நம்மை தொட்டு தொட்டு அழகாக வனைந்தார். ஆனால் பாவத்திற்கு இடம் கொடுத்த பொழுது பிசாசுக்கு சொந்தமாகி விட்டோம். தேவன் நம்மை அப்படியே விட்டு விடவில்லை. பிசாசினுடைய பிடியில் இருக்கிற நம்மை மீட்டெடுத்து அவருடைய பிள்ளையாகும்படி அதிகாரம் கொடுத்தார். கர்த்தருடைய பிள்ளையாய் நாம் வாழ்வதே மிகப்பெரிய சிலாக்கியம். அடையாளங் களினாலும், அற்புதங்களினாலும் பலவிதமான பலத்த செய்கைகளினாலும், தம்முடைய சித்தத்தின்படி பகிர்ந்து கொடுத்த பரிசுத்த ஆவியின் வரங்களினாலும், தேவன் தாமே சாட்சி கொடுத்ததுமாயிருக்கிற இவ்வளவு பெரிதான இரட்சிப்பைக் குறித்து நாம் கவலையற்றிருக்கக்கூடாது. என்னை தேவன் ஒரு பெரிய திட்டத்துக்குள்ளாக அழைத்திருக்கிறார். அந்த திட்டத்தில் நானும் என்னை இணைத்து கொள்கிறேன். இதுதான் நாம் செய்ய வேண்டிய காரியம். அவருடைய ஜீவனைப்பெற்றுக்கொண்டு அதை வெளிப்படுத்த வேண்டும்.

ஒரு கூட்டு மனுஷனாக இருக்க வேண்டும். ஒவ்வொரு மனிதனும் தனித்தன்மை கொண்டவன். அப்படிப்பட்ட மனிதன் எப்படி ஒரு கூட்டு மனிதனாக மாற முடியும் என்றால் உதாரணமாக ஆயிரம் பேர் இருக்கிறார்கள் என்றால் அவர்கள் எல்லாரும் தேவனுடைய ஆவியினால் நிரப்பப்படும் பொழுது அவர்கள் எல்லாரும் ஒரு கூட்டு மனிதராக மாறுகிறார்கள். இந்த கூட்டு மனிதன் மூலமாக தான் தேவன் தன்னை வெளிப்படுத்த விரும்புகிறார். ஆண்டவர் வந்து நம்முடைய ஆவியிலே ஒன்றாக கலந்திருக்கும் பொழுது தான் அவர் வெளிப்பட முடியும். அப்படி அவர் நம் மூலம் வெளிப்படுவதற்கு பெயர் தான் சபை. இந்த உலகத்தில் அதற்கு பெயர் சபை வருகிற நாட்களில் அது புதிய எருசலேம் என்று சொல்லப்படும். தேவன் மனுஷனை எப்படி படைத்தார் என்றால் ஆவி, ஆத்துமா, சரீரம் என்று மூன்று பகுதிகளாக படைத்தார். ஆவியில் தான் தேவன் வாசம் பண்ண வேண்டும். இந்த ஆவியில் தான் தேவன் ஒன்றர கலக்க வேண்டும். ஆவிக்கு பெயர் தான் உள்ளான மனுஷன். இந்த உள்ளான மனுஷனில் தேவன் வெளிப்பட வேண்டும் என்றால் தேவன் ஆவியில் வரவேண்டும். தேவனுடைய நோக்கம் என்னவென்றால் அவருடைய சாயலில் உருவாக்கப்பட்டு அவருடைய ஜீவனால் நிரப்பப்பட வேண்டும்.

ஆண்டவர் நம்முடைய ஆவியில் கலக்க வேண்டும் (Dispensation of God's Spirit). உதாரணமாக ஒரு சின்ன பாத்திரத்தில் தண்ணீர் வைத்திருக்கிறோம். அந்த தண்ணீரில் ஒரு சொட்டு சிவப்பு நிறத்தை கலந்து விட்டால் அது அந்த பாத்திரத்தில் இருக்கும் தண்ணீரை முழுவதையும் சிவப்பு நிறத்தில் மாற்றிவிடுகிறது. இப்பொழுது நாம் தண்ணீரை பார்த்தால் தண்ணீரின் நிறம் நமக்கு தெரியாது. மாறாக நாம் அதை சிவப்பு நிறத்தில் இருக்கிறது என்று சொல்லுவோம். அதைப்போல தேவனுடைய ஆவியும் நம்முடைய ஆவியுடனே ஒன்றர கலக்கும்போது நம்முடைய ஆவியின் தன்மை குறைந்து, நம்மில் அவர் பெருக வேண்டும். யோவான் ஸ்நானன் சொல்வது போல அவர் பெருகவும், நான் சிறுகவும் வேண்டுகிறேன். ஏனென்றால் நாம் மண்ணில் இருந்து உருவாக்கப்பட்டபடியால் மண்ணின் தன்மையோடு இருக்கிறோம். இந்த மண்ணின் தன்மை மகிமையின் தேவனுடைய தன்மையோடு இணைய வேண்டும். என்னுடைய ஆவியில் இருக்கிற தேவன் அப்படியே பரவி என் ஆத்துமாவில் பரவ வேண்டும். ஆத்துமா என்பது மூன்று பகுதிகளை கொண்டது. மனம், உணர்ச்சி, சுயசித்தம். என்னுடைய உணர்ச்சியில் அவர் வரும்பொழுது அவர் யார் என்பதை அறிந்து கொள்ள உதவுகிறார். என்னுடைய உணர்ச்சியில் அவர் வரும்போது அவருடைய அன்பை அறிந்து கொள்வதற்கு அவரை நேசிப்பதற்கு உதவுகிறார். அவர் நம் சுய சித்தத்தில் வரும்போது நமக்குள்ளாக எத்தனை

விருப்பங்கள் இருந்தாலும் என் விருப்பம் ஒன்றும் இல்லை எல்லாம் உங்க விருப்பம் ஆண்டவரே என்று அர்ப்பணிக்க முடியும். இதற்காக தான் தேவன் ஆவியிலே வந்தார். ஆவியிலே இருக்கிற ஆண்டவர் நம் மனதை மாற்றி நம் உணர்ச்சிகளை தொட்டு நம் சித்தத்தை எல்லாம் மாற்றி வரும்பொழுது ஆவியானவர் எதை விரும்புகிறாரோ அதை தான் நம் சரீரம் செய்யும். நமக்குள் இருக்கிற தேவனை நாம் வெளிப்படுத்த முடியும். இதுதான் தேவனுடைய திட்டம்.

ஆண்டவர் மனிதனை ஒரு கூட்டு மனிதனாக உருவாக்கி அவனுக்குள் தன்னுடைய ஜீவனை வைத்து அவன் மூலமாக அவர் வெளிப்படவேண்டும். இதுதான் தேவனுடைய அநாதி திட்டம். இந்த திட்டத்தை நிறைவேற்றுவதற்கு தேவன் எடுத்துக் கொண்ட வழி முறைகளை நாம் பார்க்கும் பொழுது ஒரு இரட்சிப்புக்கு இவ்வளவு பெரிய திட்டங்களை தேவன் வைத்திருக்கிறார் என்பது நமக்கு ஆச்சரியமாய் இருக்கிறது. சபை என்றால் ஏதோ உருவாகிவிட்டது என்று அல்ல. உலகம் தோன்றுவதற்கு முன்பாகவே இப்படிப்பட்ட ஒரு சபை உண்டாக்க வேண்டும் என்பதற்காகத்தான் தேவன் மனிதனை இரட்சித்தார். வேத வசனம் சொல்கிறது இரட்சிக்கப்பட்டவர்களை தேவன் அனுதினமும் சபையில் சேர்த்துக் கொண்டு வந்தார். சபை என்பது சாதாரணமானது அல்ல, அது தேவனுடைய மகா பெரிய திட்டத்தில், அது ஒரு முக்கிய பகுதி. எனவே தான் சரீரமாகிய சபை, மணவாட்டியாகிய சபை என்று சொல்லப்பட்டு இருக்கிறது. ஒரு கூட்டு மனிதனாக நம்மை உருவாக்கி நமக்குள் அவருடைய ஜீவனை வைத்து நம் மூலம் அவர் வெளிப்பட வேண்டும். இதுதான் தேவனுடைய திட்டம்.

தொடரும்.

## அகில இந்திய அசெம்பிளீஸ் ஆஃப் காட் சபைகளின் மிஷனரிகளின் குடும்பம் மற்றும் மிஷன் தலைவர்களின் மாநாடு

## FIRST MISSIONARY CONFERENCE

AG இந்தியா மூலம் முதல் முறையாக இந்த சரித்திரம் படைக்கும் மாநாடு பெங்களூர் நகரில் பூரண சுவிசேஷ அசெம்பிளீஸ் ஆஃப் காட் சபையில் வைத்து (FGAG BANGALORE) ஆகஸ்ட் 8 முதல் 10 வரை நடைபெற்றது. அகில இந்திய AG சபைகளின் பொதுத்தலைவர் பாஸ்டர்.பால் தங்கையா மற்றும் அகில இந்திய AG சபைகளின் மிஷன் இயக்குனர் பாஸ்டர் T.R.ஜான் வின்ஸ்லி ஆகியோர் இணைந்து இம்மாநாட்டை ஏற்பாடு செய்திருந்தனர்.

160 மாற்றுக்கலாச்சார மிஷனரிக் குடும்பங்களும், 120 மிஷன் தலைவர்களும் பங்கு பெற்றனர். மிஷனரிகளின் மனைவியர், குழந்தைகள், வாலிபப் பிள்ளைகள் ஆகியோருக்கு தனித்தனியே கூட்டங்கள் நடைபெற்றது. இரண்டாம் நாளன்று அனைவருக்கும் மருத்துவப் பரிசோதனைகளை பெங்களூர் பாப்டிஸ்ட் மருத்துவமனையிலிருந்து வந்திருந்த மருத்துவக் குழுவினர் நடத்தினார்கள. பெங்களூர் (FGAG) சபையாரின் விருந்தோம்பலும் ஆயத்த ஏற்பாடுகளும் சிறப்பாக இருந்தது.

நமது தமிழ் பிரதேசத்தின் தலைவர் பாஸ்டர் ஸ்டீவ் ஜெயராஜ் அவர்கள் முதல் நாள் மாலை தேவ செய்தியளித்தார்கள். நமது மிஷன் இயக்கத் தலைவர்கள் பாஸ்டர் தாமரைச் செல்வன், பாஸ்டர்.எட்வின் பிரபாகர் மற்றும் மண்டல மிஷன் பொறுப்பாளர்கள் பங்கேற்றனர்.

Rev. T.R.ஜான் வின்ஸ்லி

(புகைப்படங்கள் பின் அட்டையில் பார்க்கவும்)



# மிஷனரிப் பயண அனுபவங்கள்

**Rev. J. தேவதாசன் கலையரசன்**

Senior Pastor, Bethel AG Church, Kolathur
Asst.Director, North West Mission

TAMIL DISTRICT MISSIONS
India and beyond...

எங்கள் மண்டலத்திலிருந்து குறுகிய கால மிஷன் டிரிப் செல்ல வேண்டும் என்று 2014-ல் முயற்சித்தோம். முந்தய சில வருடங்களிலும் இப்படிச் செய்ய விரும்பினோம், கூடிப் பேசினோம். ஆனால் நாட்களைக் குறித்து திட்டம் பண்ணுவதற்குள் அந்த வருடமே முடிந்துவிடும். அதுவல்லாமல் எந்த மாநிலம் செல்வது என்றும் குழம்பிக்கொண்டு இருந்தோம். 2014ம் ஆண்டு, அப்போது தமிழ் பிரதேச மிஷன் தலைவராக இருந்த சங்கை.ஜோஸ்வா மாசிலாமணி அவர்கள், எங்களை பஞ்சாப் மாநிலம் செல்லும்படி ஊக்கப்படுத்தினார்கள். அவர்களே பஞ்சாபிலிருந்த போதகர் ஜோசப் ராஜன் அவர்களை அறிமுகம் செய்து கொடுத்தார்கள். எனவே அவருடன் தொலைபேசியில் கலந்துபேசி வில்லிவாக்க மண்டலத்திலிருந்து 6 போதகர்கள் அடங்கிய சிறு குழுவினராக மிஷன் டிரிப் சென்றோம். பவுலின் மூன்று மிஷனரிப் பயணங்கள் எங்கள் மனதில் வந்து சென்றது. (அப்.13-14;15-18;18-13,) அதுபோன்று சாதிக்க வேண்டும் என்ற தவிப்பு இருந்தது. ஆகவே மிகுந்த எதிர்பார்ப்புடனும், ஜெபத்துடனும், போதிய ஆயத்தத்துடனும் எங்கள் பயணத்திற்கான முன் ஆயத்தத்தைச் செய்தோம். யாரைச் சந்திக்கப் போகிறோம்? என்ன செய்ய இருக்கிறோம்? என்று தெளிவற்ற சூழல் இருந்ததால் பதஷ்டத்தில் இருந்தோம். ஆயினும், யூகத்தின் அடிப்படையில் அக்குறுகியகால மிஷனரிப் பயணத்திற்குரிய அனைத்து திட்டங்களையும், இரண்டு முறை கூடி ஜெபித்து, கலந்து ஆலோசித்து முடிவு செய்தோம்.

எங்களது முதல் குறுகிய கால மிஷனரிப் பயண அனுபவங்கள் பெரிய வெற்றியென்றோ, சாதனையென்றோ மார்தட்ட இயலாது. ஆனால் அந்த முதல் பயண படிப்பினைகளைக் கொண்டு நமது சபைகள் குறுகிய கால மிஷனரிப் பிரயாணம் ஏன் செய்ய வேண்டும்?, எப்போது செல்ல வேண்டும்? எப்படி திட்டமிட வேண்டும்? எப்படி செய்யக்கூடாது? என்பதை அக்குழுவில் இருந்த நாங்கள் முதலாவது கற்றுக் கொண்டோம். அதில் கலந்துகொண்ட நான்கு சபைகளும் (6 போதகர்களும்) இன்றுவரை சிறந்த மிஷன் ஆதரவு சபைகளாக விளங்குகின்றன. 2014 முதல் இன்றுவரை மேற்கொண்ட 10க்கும் மேற்பட்ட குறுகிய கால மிஷன் டிரிப் கொடுத்த அனுபவங்களை என்றுமே மறக்க முடியாது.

மிஷனரிப் பிரயாணம் என்று சொல்லாமல் குறுகிய கால மிஷனரிப் பயணம், என்ற சொல்லாடலைப் பயன்படுத்துகிறோம் மற்றும் வட இந்திய மாநிலங்களைச் சந்திப்பது என்ற எல்லை வரையறைக்குட்பட்டே மிஷனரிப் பயண அனுபவங்கள் என்று இக்கட்டுரையில் எழுதப்பட்டிருக்கிறது.

நாங்களும் மிஷனரிப் பயணம் செல்ல விரும்புகின்றோம், எங்களுக்கு வழிகாட்டுங்கள் என்று எங்களிடம் கூறும் அநேக போதகர்களுக்கு இக்கட்டுரை நிச்சயம் உதவிடும்.

## I.பணித்தளப் பின்னணி

2014-ம் ஆண்டு தான் பஞ்சாப் மாநிலம் தனிப்பிரதேசமாக அங்கீகரிக்கப்பட்டது. அதுவரை AGNI நேரடி கண்காணிப்பில் UP (Lucknow) பிரதேசத்தின் ஒரு அங்கமாக, பஞ்சாப் கருதப்பட்டது. சங்கை பாப்பிமத்தாய் அவர்கள் பிரதேச தலைவராகவும், சங்கை. ஜோசப் ராஜன் உதவி தலைவராகவும் இருந்து வந்தார்கள். பஞ்சாபில் மூன்று மண்டலங்கள் மட்டும் அப்போது இருந்தன. பாஸ்டர் ஜோசப் ராஜன் அவர்களின் திட்டப்படி நாங்கள் சென்றது தெற்கு மண்டலத்திற்கு. தெற்கு மண்டலத்தின் தலைமைப் போதகராக இருந்த சங்கை. சன்னி சாமுவேல் அவர்களின் அனுமதியுடன் சங்கை. விஜிகுமார் வழிகாட்டலுடன் எங்களது முதல் மிஷன் பணி நன்கு அமைந்தது. அப்போது இருந்த தெற்கு மண்டலத்தில் இருந்த 23 சபைகளையும் நேரடியாக சந்தித்து, ஒருசில இரவு கூட்டங்கள் நடத்தியதே எங்களது ஊழியமாக இருந்தது. 8 நாட்களுக்குள், இரண்டு குழுவாக பிரிந்து 23 சபைகளையும் சந்தித்தோம். அங்குள்ள சபைகள் எங்கள் பயணத்தின் மூலம் ஸ்திரப்படுவதைக் கண்கூடாக பார்த்தோம். மிஷனரிப் பயணத்தில் ஈடுபட்ட நாங்கள் ஆறுபேரும் மிகவும் ஆசீர்வதிக்கப்பட்டோம். மகிழ்ச்சியோடே திரும்பி வந்தோம். முதல் மிஷனரிப் பயண அனுபவமல்லாது, தொடர் பிரயாணங்கள் மூலம் கற்றுக் கொண்டவைகளே கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

## II. ஏன் மிஷன் டிரிப் செல்ல வேண்டும்?

1. பணித்தளத்தையும், களவீரர்களையும் நேரில் பார்க்கும்போதுதான் உண்மையான பாரம் ஏற்படுகின்றது.
2. “நமது ஊரில், நமது சபை” என்ற அர்ப்பணத்துடன் ஊழியம் செய்வது அவசியம். ஆனால் குறுகிய கால மிஷன் டிரிப் நமது பார்வையை விரிவடையச் செய்கிறது. நமது தரிசனம் விரிவடைவதால் விசுவாசமும் அதிகரிக்கிறது. விலைக்கிரயம் செலுத்தும்போது அங்குள்ள ஊழியங்கள் மட்டுமல்ல, நமது சபைகளுமே அபரிவிதமாக ஆசீர்வதிக்கப்படுகின்றன.
3. உள்ளூர் சுவிசேஷ ஊழியத்தில் மட்டும் திருப்தி கொள்ளாமல் தரிசனம் விரிவடையும் போதும் களத்திற்கு நேரில் செல்லும்போதும் அப்.1:8-ல் நமது சபைக்கும் ஒரு பங்கு இருப்பதை கண்டு அனுபவிக்க முடியும்.
4. வட இந்திய ஊழியங்களில் நமது தமிழ் பிரதேசம் செய்துள்ள பணி மகத்தானது. 650 மிஷனரிகள் மாதாந்திர ஆதரவு தொகையுடன் தாங்கப்படுவதுடன், ஏராளமான சபைகளுக்கு இடங்கள் வாங்கி கொடுக்கப்பட்டுள்ளன. வாகனங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. ஆலய கட்டிடம் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. அதன் பயனாளிகளை நேரில் காணும்போதும், அங்குள்ள ஊழியர்கள் இருதயப் பூர்வ நன்றியைத் தெரிவிக்கும்போதும் நமது அர்ப்பணமும் ஆழமாகிறது.

## III. குறுகிய கால மிஷன் டிரிப்பில் யாரெல்லாம் கலந்து கொள்ளலாம்?

1. ஓரளவு சரீர ஆரோக்கியமுள்ள போதகர்கள், விசுவாசிகள்.
2. மருத்துவ மிஷன் குழுக்களில் பணிபுரிவோர்.
3. நீண்டதூர பயணத்திற்கு பழக்கப்பட்டவர்கள்.

4. அங்குள்ள உணவு முறைகளையும், வசதி குறைவுகளையும் மகிழ்வுடன் ஏற்றுக்கொள்பவர்.
5. ஓரளவு செலவு செய்ய வேண்டிய பணத்தை திரட்டக் கூடியவர்கள்.

### IV. எப்போது செல்வது நல்லது?

1. பொதுவாக வட இந்திய மாநிலங்களுக்கு பிப்ரவரி, மார்ச், ஏப்ரலுக்குள் செல்வது நல்லது. தவறினால் ஆகஸ்ட் – செப்டம்பர், நவம்பர் செல்வது நாம் தாங்கக்கூடிய சீதோஷண நிலையாக இருக்கிறது.
2. நீங்கள் போக இருக்கும் மாநிலத்திற்குகேற்ப சில மாறுதல்கள் இருக்கலாம்.

### V. எப்படி திட்டமிட வேண்டும்? எப்படி கூடாது?

1. ஒரு சிறிய குழுவாகச் செல்வது உள்ளூர் போக்குவரத்திற்கும், தங்குவதற்கு ஏற்பாடு செய்யவும் வசதியாக இருக்கும்.
2. அங்குள்ள சபைகளை செலவு செய்யும் நிகழ்ச்சிகளை திட்டமிட வேண்டாம்.
3. நமது தமிழ் நாட்டில் மற்றொரு சபைக்கு விருந்தினராக போகும்போது கிடைக்கும் அனைத்து நன்மைகளையும், உபசரிப்புகளையும் மிஷன்தளத்தில் எதிர்பார்க்கவே வேண்டாம்.
4. சுற்றுலா மனப்பான்மை, Shopping ஆர்வமுள்ளவர்கள் கூடுமான மட்டும் வடஇந்திய ஊழியங்களைத் தவிர்ப்பது நல்லது.

### இறுதியாக

தமிழ் நாட்டிலிருந்து தங்கள் குடும்பங்களைவிட்டு மிஷனரியாக வந்த நம்மவர்களை, களத்தில் சென்று நேரில் சந்திப்பது ஒரு மகிமையான தருணம். அங்குள்ள உள்ளூர் மிஷனரிகளை நேரில் சந்தித்து பாஷை அறியாத போதும் அவர்களுக்கு அன்பினால் நீங்கள் செய்யும் ஊழிய வாய்ப்புகள் உங்களைப் பரவசப்படுத்தும். அவர்கள் காலம்காலமாக எதிர்கொள்ளும் பெரும் சவால்களில் ஒரு 10 நாள் மட்டும் அவர்களுடன் இணைந்து நின்று பங்கெடுப்பது என்பது மறக்க முடியாத அனுபவமாகும். வாழ்வில் ஒரு முறையாவது செல்ல விரும்பும் புனித பயணம் போன்றதே, நாம் வலியுறுத்தும் குறுகிய கால மிஷன்டிரிப்.

---


## பரிபூரண ஜீவன் பத்திரிக்கை சந்தா மற்றும் உதவித் தொகை அனுப்ப வேண்டிய விபரம்

காசோலை / டிராப்ட் எடுக்கும்போது Tamil District Council of SIAG என்று எடுத்து பரிபூரண ஜீவன் பத்திரிக்கைக்கு என்று குறிப்பிட்டு அனுப்பவும். உங்கள் ஸ்தல சபை போதகர் மூலமாகவும் பிரதேச பொருளாளருக்கு அனுப்பி வைக்கலாம். மணியாடர் அனுப்புவதை தவிர்க்கவும். பத்திரிக்கை ஊழியத்திற்கு மணியாடர் மூலம் தான் அனுப்ப முடியும் என்ற நிலையில் உள்ளவர்கள் கீழ்காணும் முகவரிக்கு அனுப்பவும்.

**ஏ.ஜி. தலைமை அலுவலகம்**

30, நாவலர் நகர், மதுரை-625 016. போன் : 0452 4200664



# சிதறடிக்கும் கொம்புகள்

**Rev. V.J. பாலஸ்**

தலைமைப் போதகர், சிமிர்னா A.G. சபை, வண்ணாரப்பேட்டை

அனைவருக்கும் பரிபூரண ஜீவன் வாசகர்களுக்கு அன்பின் வாழ்த்துக்கள்

சகரியா 1:18-21 "நான் என் கண்களை ஏறெடுத்துப்பார்த்தபோது, இதோ, நாலு கொம்புகளைக் கண்டேன். அவைகள் என்னவென்று என்னோடே பேசின தூதனைக் கேட்டேன்; அதற்கு அவர்: இவைகள் யூதாவையும் இஸ்ரவேலையும் எருசலேமையும் சிதறடித்த கொம்புகள் என்றார். பின்பு கர்த்தர் எனக்கு நாலு தொழிலாளிகளைக் காண்பித்தார். இவர்கள் என்னசெய்ய வருகிறார்களென்று கேட்டேன்; அதற்கு அவர்: ஒருவனும் தன் தலையை ஏறெடுக்கக் கூடாதபடி அந்தக் கொம்புகள் யூதாவைச் சிதறடித்ததே, அவைகளுக்குப் பயமுறுத்துகிறதற்கும், யூதாவின் தேசத்தைப் பாழாக்கத் தங்கள் கொம்பை எடுத்த ஜாதிகளுடைய கொம்புகளை விழத்தள்ளுகிறதற்கும் இவர்கள் வந்தார்கள் என்றார்.

சகரியா தீர்க்கதரிசிக்கு தேவன் யூதாவையும், இஸ்ரவேலையும் சிதறடித்த நான்கு கொம்புகளையும். அந்த கொம்புகளை பயமுறுத்துகிறதற்கும் அவைகளை விழத்தள்ளுகிறதற்கும் தேவன் எழுப்பிய நான்கு தொழிலாளிகளையும் தரிசனத்தில் காண்பித்தார். இந்த நாட்களில் தேவபிள்ளைகள் ஆவிக்குரிய வாழ்க்கையில் அநேக காரியங்களில் விழுந்து போகிறார்கள். அவர்களை விழத்தள்ளுகிற அநேக கொம்புகள் உள்ளது. அவர்கள் விழுந்து போகிறதற்கான கொம்புகளையும், அந்த கொம்புகளை அவர்கள் வாழ்க்கையிலிருந்து எடுத்துப்போடக்கூடிய தொழிலாளிகளையும் குறித்து தியானிப்பது நமக்கு ஆசீர்வாதமாயிருக்கும்

**பெருமை:**

அநேக தேவபிள்ளைகளை விழத்தள்ளுகிற கொம்புகளில் மிக முக்கியமானது பெருமை. தேவன் எந்த பாவத்தையும் தவிர பெருமை என்ற பாவத்தை மிகவும் அதிகமாக அருவருக்கிறார் (நீதிமொழிகள் 16:5). யாக்கோபு 4:6-ல் தேவன் பெருமையுள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கிறார் என்பதாக கூறப்பட்டுள்ளது. ஆதியிலே தேவனை ஆராதித்துக்கொண்டிருந்த தேவதூதர்கள் பெருமையினால் விழுந்துபோனார்கள் (ஏசாயா 14:12-15). தேவனுக்கு சத்துருக்களாக மாறினார்கள். உசியா ராஜா தனக்கு வந்த மேட்டிமையினால் ஆசாரியர்கள் காட்ட வேண்டிய தூபக்கலசத்தை அவன் கைகளினால் ஏந்தி அவன் தேவனுக்கு தூபங்காட்ட துணிகரங்கொண்டான் (2 நாளாகமம் 26:16-21). அதினால் தேவன் அவன் நெற்றியில் குஷ்டரோகம் வரப்பண்ணினார். அவன் தேவாலயத்திற்குப் புறம்பாக்கப்பட்டான். இன்றும் பெருமை என்கிற பாவத்தினால் அநேகர் விழுந்துபோகிறார்கள், தேவனை விட்டு பின்வாங்கிபோகிறார்கள். அதை அவர்களே அறியாதிருக்கிறார்கள். அவர்களால் தேவபிரசன்னத்தை உணர்ந்துகொள்ள முடிவதில்லை. தேவனுடைய வசனத்தையும் ஏற்று கீழ்படிய முடிவதில்லை.

**தொழிலாளி- மனத்தாழ்மை :**

இப்படிப்பட்ட பெருமை என்ற கொம்பை அழிக்கிற தொழிலாளி மனத்தாழ்மையாகும். இயேசு "நான் சாந்தமும் மனத்தாழ்மையுமுள்ளவனாக

இருக்கிறேன்" என்றார் (மத்தேயு 11:29). தேவன் நம்மிடத்தில் மனத்தாழ்மையை எதிர்பார்க்கிறார் (மீகா 6:8). தாழ்மையுள்ளவர்களுக்கு தேவன் கிருபை அளிக்கிறார் (யாக்கோபு 4:6). தேவனுக்கு முன்பாக தாழ்த்துகிறவர்களை தேவன் உயர்த்து கிறார். அவர்களுக்கு தேவன் சமீபமாயிருந்து அவர்கள் விண்ணப்பங்களைக் கேட்கிறார். (லூக்கா 1:52;18:14; யாக்கோபு 4:10). ஆகவே தேவ சமுகத்தில் வரும்போது நம்மை தேவனுக்கு முன்பாக தாழ்த்தி அவருடைய வார்த்தைகளை ஏற்றுக்கொள்ளும்போது அவர் நம்மை ஆசீர்வதித்து மேன்மேலும் உயர்த்துவார்.

**சுயம் அல்லது மாம்சம் :**

ஓசியா 10:1-ன்படி இஸ்ரவேல் ஜனங்கள் தங்களுக்காகவே வாழ்ந்தார்கள். தங்களை உண்டாக்கிய தேவனை விட்டுவிட்டு தங்கள் சுய விருப்பத்துக்கேற்றவாறு அந்நிய தேவர்களை தங்களுக்கு ஏற்படுத்திக்கொண்டார்கள். அதினால் அவர்கள் சிறையிருப்புக்குள்ளானார்கள். இன்றைக்கும் அநேகருக்குள்ளாக இப்படிப்பட்ட சுயம் கிரியை செய்கிறது. இதனால் அநேகர் தங்களுக்காகவே, தங்கள் குடும்பத்திற்காகவே வாழ்கிறார்கள். தேவனுக்காக எழும்பி பிரகாசிக்க முடியவில்லை. தேவசித்தம் செய்ய முடியவில்லை.

**தொழிலாளி – பரிசுத்த ஆவியானவர் :**

பரிசுத்த ஆவியானவர் ஒரு மனிதனுக்குள்ளாக வரும்போது அவனுக்குள்ளாக இருக்கிற சுயம் மாறுகிறது. அவன் தேவனுக்காக எழும்பி பிரகாசிக்க முடியும். பேதுரு பரிசுத்த ஆவி பெறும் முன்பாக இயேசு கைது செய்யப்பட்ட வேளையிலே தனக்குள்ளே இருந்த சுயத்தினால் போர்சேவகனின் காதை வெட்டினான். பின்பு பிரதான ஆசாரியர்களின் வேலைக்காரர்களுக்குப் பயந்து இயேசுவை மறுதலித்தான். ஆனால் பரிசுத்த ஆவி பெற்ற பின்போ தைரியமாக இயேசுவுக்காக துணிந்து நின்றான். பரிசுத்த ஆவியானவர் ஒரு மனிதனுக்குள் வரும்போது அவனுடைய சுயத்தை வெறுக்க அவனுக்கு உதவி செய்கிறார் (கலாத்தியர் 5:16).

**பொறாமை :**

காயீன் ஆபேலின் மீது பொறாமை கொண்டு அவனைக் கொலை செய்தான் (ஆதியாகமம் 4:3-16). அவன் கொலை செய்தபடியினால் அவன் தேவனுடைய சமுகத்திற்கு விலகிப்போக வேண்டியதாயிற்று. அதனால் அவன் பெரிய பாதிப்புக்குள்ளானான். அதுபோல யாக்கோபின் குமாரர் யோசேப்பின் மேல் பொறாமை வைத்து அவனை குழியில் போட்டனர் (ஆதியாகமம் 37:23,24). சவுல் தாவீதின்மேல் பொறாமை வைத்து அவனைக் கொல்ல துரத்தினான் (1சாமுவேல் 18:6-9). இன்றைக்கும் சபையில் ஒருவர் ஆசீர்வதிக்கப்படும்போது ஒரு சிலருக்குள்ளாக பொறாமை ஏற்படுகிறது. இந்த பொறாமை என்கிற பாவத்தை நாம் மேற்கொள்ள வேண்டும்.

**தொழிலாளி – அன்பு :**

1கொரிந்தியர் 13:4ன்படி நமக்குள் அன்பு நிலைத்திருக்குமானால் நமக்குள் பொறாமை வராது. ஏனெனில் அன்புக்கு பொறாமையில்லை. ஆகவே தேவ அன்பில் நாம் நிலைத்திருப்போம். மற்றவர்கள் ஆசீர்வதிக்கப்படும்போது நாம் தேவனைத் துதிப்போம். நாம் பொறுமையோடு இருந்தால் தேவன் நம்மையும் ஆசீர்வதித்து உயர்த்துவார். வேதாகமத்தில் யோசுவாவை தேவன் உயர்த்தியபோது காலேப் அவனைக் கண்டு பொறாமைப்படாமல் பொறுமையாக இருந்தான். யோசுவாவை

நேசித்து அவனுக்கு கீழ்படிந்திருந்தான். அதனால் தேவன் காலேபை மிகவும் ஆசீர்வதித்தார். அவன் யோசுவாவினிடத்தில் மலை நாட்டைக் கேட்டான். அங்கே இருந்த இராட்சதர்களை துரத்தி அரணிப்பான பெரிய பட்டணங்களைக் கைப்பற்றினான். அவன் சந்ததி தேவனால் ஆசீர்வதிக்கப்பட்டது. அவன் கோத்திரத்திலே இராஜாக்கள் தோன்றினார்கள்.

**பெண்ணாசை:**

இன்றைய நாட்களில் நம்முடைய ஆவிக்குரிய வாழ்க்கையை சிதறடிக்கிற கொம்புகளில் முக்கியமானது. இந்த உலக ஆசை. இந்த உலக ஆசையில் பெண்ணாசை, மண்ணாசை, பொண்ணாசை போன்ற பல ஆசைகள் காணப்படுகிறது. வேதத்தில் நாம் பார்க்கும்போது சாலமோன் இராஜா தேவனுக்குப் பிரியமான ஒரு ராஜாவாக தேவனுக்கு பிரியமான ஜெபத்தை செய்து தேவ ஞானத்தைப் பெற்ற ஒரு மேன்மையான ராஜாவாக இருந்தான். ஆனால் அவன் தன்னுடைய விசுவாச வாழ்க்கையில் விழுந்து போவதற்கான காரணம் அவன் அநேக ஸ்திரீகளின்மேல் ஆசை வைத்து அவர்களோடு ஐக்கியமாயிருந்தபடியால் அவர்கள் அவனுடைய இருதயத்தை கர்த்தரைவிட்டு அந்நிய தேவர்களைப் பின்பற்றும்படி வழுவிப்போக பண்ணினார்கள் (1 இராஜாக்கள் 11:1,2). அதுபோல தாவீதின் குமாரன் அம்னோன் இவன் தாவீதின் மூத்த குமாரனாக இருந்தவன். தாவீதுக்குப் பிறகு ராஜாவாக முடி சூட்டிக்கொள்ளக்கூடியவனாக இருந்தான். ஆனால் இவனுக்குள்ளிருந்த பெண்ணாசையினால் தகாத உறவில் ஈடுபட்டு தன் சகோதரியாகிய தாமாரின் மேல் ஆசை வைத்து அவளை கெடுத்தான். (2 சாமுவேல் 13:1-20, 28,29) அதனால் அந்த இராஜ மேன்மையை இழந்து தாமாரின் சகோதரன் அப்சலோமினால் கொல்லப்பட்டான்.

**தொழிலாளி- தேவ வார்த்தை:**

இப்படிப்பட்ட பெண்ணாசை என்ற கொம்பை அழிக்கிற தொழிலாளி தேவ வார்த்தை ஆகும். தேவனுடைய வசனம் சங்கீதம் 119:11-ன்படி நாம் இப்படிப்பட்ட பாவத்தை வெறுக்க வேண்டுமானால் தேவனுடைய வார்த்தையை நம்முடைய இருதயத்தில் பதித்து வைக்க வேண்டும். உமக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்யாதபடிக்கு, உமது வாக்கை என்னிருதயத்தில் வைத்து வைத்தேன்., 1யோவான் 3:9 ல் சொல்லப்பட்டபடி தேவனுடைய வித்தாகிய அவருடைய வார்த்தை நமக்குள் தரித்திருக்குமானால் நாம் தேவனுக்கு விரோதமான பாவம் செய்யமுடியாது.

ஆகவே இப்படிப்பட்ட இன்னும் அநேக கொம்புகள் தேவ பிள்ளைகளை விழத்தள்ள போராடிக்கொண்டிருக்கிறது. நாம் தேவனிடத்தில் வந்து தேவன் சொல்லுகிற வார்த்தையைக் கேட்டு, விசுவாசித்து அதின்படி நடப்போமானால் எந்த கொம்புகளும் நம்மிடத்தில் அதிகாரம் செலுத்த முடியாது. நாம் வெற்றியுள்ள வாழ்க்கை வாழ்ந்து தேவனை சந்திப்போம். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக. ஆமென்.

---

"A congregation that is not deeply and earnestly involved in the worldwide proclamation of the gospel does not understand the nature of salvation."

Ted Engstrom, World Vision



சிறுவர் பகுதி

# தெரிஞ்சுக்கோ புரிஞ்சுக்கோ


பாஸ்டர். பெவிஸ்டன்

பூரண கிருபை ஏ.ஜி சபை, கருப்பாயூரணி, மதுரை-20

Contributing Editor, Paripoorana Jeevan


ஹாய் குட்டீஸ்.. எல்லாரும் எப்படியிருக்கிறீங்க? பரிபூரண ஜீவன் சிறுவர் பகுதிக்கு நீங்கள் கொடுத்துவரும் மேலான ஆதரவை உங்கள் கருத்துக்கள் மூலம் அறிந்து தேவனை துதிக்கிறேன். ஒரு சுவாரசியமான கதையை உங்களுக்காக வைத்திருக்கிறேன். கதை கேட்க ரெடியா? வாங்க போகலாம்..

மிகவும் புகழ் பெற்ற ஒரு கல்லூரியில் மாணவர்கள் அனைவரும் தங்கள் வகுப்பறையில் அமர்ந்திருந்தனர். அது தத்துவ வகுப்பு நேரம். அன்றைய வகுப்பில், கடவுள் இருக்கிறாரா? இல்லையா? என விவாதிக்கப்பட்டது. இந்த விவாதம் மிகவும் ஆர்வமாக இருந்தது. ஏனென்றால், இன்றைக்கான விவாதமே 'கடவுள்' தானே. பல ஆண்டுகளாக விவாதிக்கப்படும் முடிவில்லாத கேள்வி. விவாதம் மிகவும் காரசாரமாக இருந்தது. தத்துவ பேராசிரியர் தன்னுடைய கருத்துக்களை ஒரு தர்க்க ரீதியிலான மூன்று கேள்விகளை முன்வைத்தார்.

1. இந்த வகுப்பறையில் இருக்கிற யாராவது ஒருவர் எப்பொழுதாவது கடவுள் பேசியதை கேட்டு இருக்கிறீர்களா?

   ஒரே அமைதி மாணவர்கள் யாரும் பேசவில்லை.

2. இந்த வகுப்பறையில் உள்ள யாராவது எப்பொழுதாவது கடவுளைத் தொட்டு பார்த்திருக்கிறீர்களா?

   மீண்டும், மாபெரும் அமைதி. ஒருவரும் வாய் திறக்க முயற்சிக்கவில்லை.

3. இந்த வகுப்பறையில் உள்ள யாராவது எப்பொழுதாவது கடவுளை நேரில் கண்டதுண்டா?

   உலகமகா அமைதி, மாணவர்கள் துணிந்து எந்த பதிலையும் கூறவில்லை.

அந்த வாய்ப்பை பயன்படுத்திக்கொண்ட பேராசிரியர், நல்லது, அது தான் உண்மை! உங்கள் அமைதி என்ன சொல்கிறதென்றால், நீங்கள் யாரும் கடவுள் பேசியதை கேட்கவில்லை, கடவுளை தொட்டு பார்த்ததில்லை, கடவுளை நேரில் கண்டதில்லை. ஏனென்றால், 'கடவுள் இல்லை! இல்லவே இல்லை!' என்றார்.

ஒரு மாணவன் சில நொடிகள் யோசனைக்கு பிறகு தனது பேராசிரியரின் தத்துவ கருத்துக்கு பதில் அளிக்க அனுமதி கேட்டான்.

பேராசிரியரும் மிகுந்த ஆர்வத்துடன், அந்த துணிச்சலான மாணவனின் பதிலை கேட்க அனுமதி அளித்தார். அந்த மாணவன் எழுந்து நின்று தன்னுடைய சக மாணவர்களைப் பார்த்து, நானும் மூன்று தத்துவ கேள்விகளை முன்வைக்க விரும்புகிறேன். பதிலளிக்க விரும்பும் சக மாணவர்கள் தத்துவ ரீதியில் கருத்துக்களை கூறலாம் என முன்னுரை கொடுத்துவிட்டு, மூன்று கேள்விகளை எழுப்பினான்.

1. இந்த வகுப்பில் உள்ள யாராவது ஒருவர், எப்பொழுதாவது நமது பேராசிரியரின் மூளை பேசியதை கேட்டு இருக்கிறீர்களா?

   மாணவர்களிடம் ஒரே அமைதி..

2. இந்த வகுப்பில் உள்ள யாராவது ஒருவர் எப்பொழுதாவது நமது பேராசிரியரின் மூளையை தொட்டுப் பார்த்து இருக்கிறீர்களா?

   மாபெரும் அமைதி. ஆங்காங்கே கேட்ட கொஞ்சம் கூச்சல்களும் மொத்தமாக அடங்கிவிட்டது.

3. இந்த வகுப்பில் உள்ளவர்கள் யாராவது ஒருவர் எப்பொழுதாவது, நமது பேராசிரியரின் மூளையை நேரில் கண்டதுண்டா?

   வகுப்பறையில் மயான அமைதி, யாரும் எதுவும் பேசவில்லை.

அந்த துணிச்சலான மாணவன் தன்னுடைய பேச்சை தொடர்ந்தான். ஆம், அது தான் உண்மை.! பேராசிரியரின் தத்துவப்படி கடவுள் பேசியதை இங்குள்ளவர்கள் யாரும் கேட்கவில்லை, கடவுளைத் தொட்டு பார்த்ததில்லை மற்றும் கடவுளை நேரில் கண்டதில்லை. ஆகையால், கடவுள் இல்லை அப்படித்தானே?

அப்படியென்றால், யாரும் நமது பேராசிரியரின் மூளை பேசியதை இதுவரை கேட்டதில்லை, அவரின் மூளையை யாரும் இதுவரை தொட்டு பார்த்ததில்லை மற்றும் அவரின் மூளையை இதுவரை யாரும் நேரில் கண்டதில்லை. ஏனென்றால், 'நமது பேராசிரியருக்கு மூளை இல்லை! இல்லவே இல்லை!' என்றான்.

பேராசிரியர், தனது தவறை உணர்ந்தார். துணிச்சலான அந்த மாணவனின் சிறந்த பதிலை மனநிறைவுடன் பாராட்டினார். பின்னர் எனக்கு மூளை இருக்கிறது என்பதை உங்கள் கண்முன் நிறுத்தி நிரூபிக்க முடியவில்லையென்றாலும், எனக்கு மூளை இருக்கிறது என்பதற்கு நானும் என் செயல்பாடுகளும் தான் சாட்சி என்றார். அப்படியானால் கடவுள் இருக்கிறார் என்பதற்கும் நாமும் நமது செயல்பாடுகளுமே சாட்சிகளாக இருக்கிறது என்ற தத்துவத்தை கூறி வகுப்பை தொடர்ந்தார்.

அன்பு தம்பி தங்காய், நவநாகரீக உலகில் கடவுள் இல்லை என்ற கருத்து இளம் மாணவர்களை அதிகமாக கவர்ந்து வருகிறது. படைப்புகள் இருந்தால் படைத்தவர் இருக்க வேண்டியது உண்மையல்லவா? தேவன் இல்லை என்று மதிகெட்டவன் தன் இருதயத்தில் சொல்லிக்கொள்ளுகிறான் (சங்கீதம் 14:1) என பரிசுத்த வேதாகமம் கூறுகிறது. உயிர்த்தெழுந்த இயேசு கிறிஸ்து சந்தேகப்பட்ட தமது சீஷன் தோமாவிடம்: தோமாவே, நீ என்னைக் கண்டதினாலே விசுவாசித்தாய், காணாதிருந்தும் விசுவாசிக்கிறவர்கள் பாக்கியவான்கள் என்றார்.

பரிசுத்த வேதாகமம் மட்டுமே கடவுள் இருக்கிறார் என்பதையும், கடவுள் ஒருவரே என்பதையும், அந்த ஒரே கடவுள் யார் என்பதையும், கடவுளின் தன்மை, சித்தம், அன்பு எப்படிப்பட்டது என்பதையும், அந்த கடவுளை சென்றடையும் வழியையும் சந்தேகத்திற்கு இடமின்றி தெளிவுர எடுத்துரைக்கிறது.

### மனன வசனங்கள்

விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும், காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது (எபிரெயர் 11:1).

இந்த பகுதி உங்களுக்கு பிரயோஜனமாக இருந்திருக்கும் என நம்புகிறேன். உங்கள் மேலான கருத்துக்களை 97503 81784 என்ற எண்ணிற்கு குறுஞ்செய்தி மூலம் தெரியப்படுத்துங்கள். தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.. அடுத்த இதழில் மற்றொரு சிறுகதையுடன் உங்களை மறுபடியும் சந்திக்கிறேன்.. டாட்டா...



# தாழ்மையின் பத்து தன்மைகள்

## 10 Habits of Humility

Rev. D. சாலமோன்

தலைவர், கிறிஸ்துவின் ஸ்தானிகர்கள் வாலிபர் ஊழியம்

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில், கிறிஸ்துவின் ஸ்தானிகர் CA ஊழியங்களின் சார்பில் அன்பின் வாழ்த்துக்கள். கடந்த பதிப்புகளில் ஸ்தலசபை வாலிப ஊழியர்களின் (பணிவிடை தலைவரின்) தலைமைத்துவ பண்புகள், குறித்து பகிரப்பட்டது. அதன் தொடர்ச்சியாக வாலிப தலைவரின் “தாழ்மை” குறித்து இப்பக்கங்களில் காண்போம்.

நம் அனைவரது வாழ்க்கையில் இன்றியமையாத ஒரு பண்பு என்றால் அது தாழ்மை. ஒருவரின் வளர்ச்சியையும் வீழ்ச்சியையும் தீர்மானிக்கின்ற ஒரு காரணியாகும். யோவான் 13:1-17 ஆகிய வசனங்களில் தாழ்மையின் குணத்தை விளக்கி மட்டுமல்ல, செயல்படுத்தியும் காட்டியவர் நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து Humility is well Explained as well Experimented.

**1 சாமுவேல் : 9:2**

ஒருங்கிணைந்த இஸ்ரவேல் தேசத்தில் முதல் ராஜாவாகிய சவுலை தனித்தன்மையான வாலிபனாக வேதம் அறிமுகம் செய்கிறது. பென்யமீன் கோத்திரத்தில் மிக ஏழ்மையான நிலையில் இருந்து தேவன் சவுலை தெரிந்து கொண்டார். ஆரம்பத்தில் ராஜாவாவதற்கு சவுல் தன்னை எவ்வளவேனும் தகுதியாக கருதவில்லை. தகுதி உள்ளவர்களை அழைத்து பயன்படுத்துவது உலகத்தின் வழக்கம். ஆனால் தகுதியில்லாதவர்களை அழைத்து பயன்படுத்துவது நமது தேவனுடைய சித்தம்.

40 வருடங்கள் இராஜாங்கத்தில் இருந்த சவுல் முதல் வருடம் மட்டுமே தேவசித்தத்தின்படி தன் பணியை நிறைவேற்றினார். மீதமுள்ள 39 வருடங்கள் 90%க்கு மேல் முற்றிலும் முரண்பட்ட நிலையில் அவரது வாழ்க்கையும் இராஜாங்கமும் இருந்தது. சாதனையாளர் சவுல் என்ற நிலையில் இருந்து சோதனையான சோகமான மனநிலைக்கு தகுதி இழக்க காரணம் “தாழ்மை இல்லாமை” Saul life was shifted from God centered to self centered. நான் என்ன செய்கிறேன் என்பதைவிட நான் யாராக இருக்கிறேன் என்பது முக்கியம். 'Identity is more important than initiatives'.

Humility is not thinking less of yourself, its thinking of yourself less (C.S.Lewis). தன்னை குறித்து மதிப்பிடுவது தாழ்மை அல்ல, தன்னை குறித்து சரியாக நினைப்பதே தாழ்மையாகும். தன்னை குறைத்து மதிப்பது தாழ்வு மனப்பான்மையாகும்.

தாழ்வு மனப்பான்மையை தேவன் ஒருபோதும் விரும்புவது இல்லை. ஒருவர் தாழ்மையோடு செயல்படுகிறார் என்பதை அறிந்துகொள்ள சில அடையாளங்களைக் குறித்து கற்றுக்கொள்வோம்.

**தாழ்மையின் பத்து தன்மைகள் - 10 Habits of Humility**

- **Value Relationship-உறவு மதிக்கப்படுகிறது:** நீங்கள் எதிர்பார்க்கின்ற

நிலையில் பிறர் இல்லாத நிலையிலும் அவர்களுக்கு கொடுக்க வேண்டிய மரியாதையை கொடுப்பது தாழ்மையின் அடையாளமாகும்.

- **Put others first-மற்றவர்களுக்கு முதலிடம் :** உங்களில் எவனாகிலும் முதன்மையாய் இருக்க விரும்பினால், அவன் எல்லாருக்கும் ஊழியக்காரனாயிருக்கக் கடவன் (மாற்கு 10:44).
- **Listen Earnestly-கனிவுடன் கவனிப்பது** : தங்களோடு இருப்பவர்களின் தேவைகளை, பிரச்சனைகளை அவர்கள் சொல்வதை கடமைக்கு அல்ல; ஆதிக்க மனநிலையோடு அல்ல. மாறாக மனதுருக்கத்துடன் கவனித்து கரிசனையோடு செயல்படுவார்கள்.
- **Curosity-கற்பதில் ஆர்வமாய் இருப்பது:** 1தீமோ.4:13 கற்பதிலும், வாசிப்பதிலும், Internet-ல் அனுதினமும் புதிய தகவல்களை அறிந்து கொள்வதில் முனைப்புடன் இருப்பார்கள்.
- **Speaks from the heart-மனதார சத்தியம் பேசுவது:** கேட்டதை அல்ல, எந்த நிலையிலும், எந்த இடத்திலும் உண்மையை பேசுவது (சங்கீதம் 15:2).
- **Taking time to say thanks-நன்றி சொல்வது**: தனக்கு உதவி செய்யும் நபர்களுக்கு நேரம் எடுத்து நன்றி சொல்லும் பழக்கம் உடையவர்கள். "நன்றியறிதல் உள்ளவர்களாயுமிருங்கள்" (கொலோ.3:15).
- **Focus on 'we' not 'I'- "நான் அல்ல நாங்கள்":** அவனவன் தனக்கானதை அல்ல பிறருக்கானதை நோக்குவானாக (பிலி.2:4).
- **Accepting feed backs-கருத்துக்கள், விமர்சனங்கள் கேட்பதும், ஏற்பதும். Everything has room for improvement. Reviews and feed backs on our actions to improve ourself.**
- **Seeking help -** தகுந்தவர்களின் உதவியை நாடுவது
- **Assuming responsibility -** பொறுப்புகளை ஏற்பது.

## Application of Humility in our Lives
## தாழ்மையை உங்கள் வாழ்வில் நடைமுறைப்படுத்துதல்

❖ **Value relationship with your team.**

மற்றவர்களோடு உங்களுக்கு இருக்கும் உறவை கனம்பண்ணுங்கள்.

❖ **Go out of the way to serve your team.**

கிறிஸ்துவின் சிந்தையோடு பிறர் நலன்கருதி நல்ல சமாரியனாய் செயல்படுங்கள்.

❖ **Don't try to do everything yourself.**

ஒருவனாய் அனைத்தையும் செயல்படுத்த நினையாமல் உங்களோடு ஒருவரை சேர்த்து கொண்டு கற்றுக்கொடுத்து, பிறரை உருவாக்குங்கள்.

❖ **Don't show off who you are.**

எப்போதும் ஒருபோதும் நீங்கள் யார் என்று வெளிக்காட்ட வாய்ப்பு தேடாமல், ஆண்டவராகிய இயேசு உங்கள் மூலம் வார்த்தையிலும், வாழ்க்கையிலும் மகிமைப்பட செயல்படுங்கள். மத்தேயு 5:2 வசனம் சொல்லுகிறது "ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள்; பரலோக ராஜ்யம் அவர்களுடையது".



# கேள்வியும் நானே... பதிலும் நானே...

## I AM THE QUESTION AND I AM THE ANSWER

**Rev.K.ராஜா**

இயக்குநர், கிறிஸ்துவுக்கு மாணவர் ஊழியம்

கிறிஸ்துவில் அன்பான மாணவ, மாணவிகளுக்கு ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள்.

மாணவப் பருவத்தையும், “கேள்வி” என்ற வார்த்தையையும் பிரிக்க முடியாது என்பது நமக்கு தெரிந்ததே. ஏன் படிக்கவில்லை? ஏன் எழுதவில்லை? ஏன் வெற்றியடையவில்லை? ஏன் அதிக மதிப்பெண் பெறவில்லை? என ஆயிரக்கணக்கான கேள்விகளை ஒரு மாணவன் சந்தித்திருக்க வாய்ப்பு இருக்கிறது.

அதனால்தான் என்னவோ, யாருக்கும் கேள்வி கேட்டால் பிடிக்காமலேயே போய்விடுகிறது. யார் நம்மிடம் கேள்வி கேட்காமல் பழகுகிறார்களோ, அவர்களையே நமக்கு மிகவும் பிடித்து விடுகிறது.

இது ஒருபக்கம் இருக்க, இன்னொரு பக்கம் நாம் மற்றவர்களிடம் கேள்வி கேட்பது. இது மிகவும் பிடித்த காரியமாக நமக்கு இருக்கும். காரணம், கேள்வி கேட்பவர் பெரிய ஆள் என்பது போன்ற ஒரு எண்ணம்.

இந்த இரண்டு நிலையையும், அதாவது மற்றவர் கேள்வி கேட்டு நாம் பதில் சொல்வது, நாம் கேள்வி கேட்டு மற்றவர்கள் பதில் சொல்வது என்ற நிலைகளைத் தாண்டி, நமக்கு நாமே கேள்வி கேட்டு, நமக்கு நாமே பதில் சொல்வது என்ற ஒரு நிலை இருக்கிறது. அது மிகவும் வலிமை வாய்ந்தது. அதாவது, நமக்கு நாமே ஒரு கேள்வியைக் கேட்டு, அந்த கேள்விக்கான பதிலையும், நமக்கு நாமே கண்டுபிடிப்பது என்பது நமக்குள்ளேயே ஒரு தேடுதல் வேட்டையைத் தூண்டிவிடும். அது அரிய பெரிய காரியங்களைச் செய்ய வழி நடத்தும்.

ஆப்பிள் ஏன் மரத்திலிருந்து கீழே விழுந்தது? என்ற கேள்வியை சர் ஐசக் நியூட்டன் தனக்குத் தானே கேட்டதன் விளைவுதான் புவிஈர்ப்பு விசை இருக்கிறது என்ற ஒரு கண்டுபிடிப்பு.

பறவைகள் ஏன் கீழே விழுகிறதில்லை? என்ற கேள்வியை ரைட் சகோதரர்கள் கேட்டதன் விளைவுதான், ஆகாய விமானம் என்ற ஒரு கண்டுபிடிப்பு.

அதைப்போல நாம் நம்முடைய வாழ்வைக் குறித்த சில கேள்விகளை நம்மைப் பார்த்து கேட்டு, நம்முடைய வாழ்க்கையே அதற்கு பதில் சொல்லவும் முயற்சி எடுப்போமானால், நிச்சயம் நாம் அடுத்தடுத்த நிலைகளில் முன்னேறிச் சென்று கொண்டே இருப்போம்.

இதற்கு உதவியாக, புத்தக ஆசிரியர் திரு.தங்கவேலு மாரிமுத்து அவர்கள் எழுதிய “கேட்கக் கேட்கத் தெளிவு” என்ற புத்தகத்திலிருந்து மாணவ, மாணவிகள் தங்களுக்குத் தாங்களே கேட்டு, பதில் சொல்ல வேண்டிய கேள்விகளை கீழே தருகிறோம். (புத்தக ஆசிரியருக்கு மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம்)

**கேட்க வேண்டிய கேள்விகள்...**

1. வகுப்பில் அன்று நடக்கும் பாடங்களை அன்றே வீட்டில் நன்றாகப் படித்து விடும் பழக்கம் உண்டா?
2. அந்தப் பழக்கம் இல்லையென்றால் உயர்ந்த மதிப்பெண்கள் வாங்குவது மிகவும் சிரமம் என்பதை உணர்ந்திருக்கிறேனா?
3. பள்ளியிலிருந்து வீடு திரும்பியது முதல், இரவு படுக்கப்போகும் வரை தினமும் எத்தனை மணிநேரம் படிக்கிறேன்? அது போதுமா?
4. அதுபோல காலையில், தினமும் பள்ளி செல்லுமுன் படிப்பதற்காக கொஞ்சமாவது நேரம் ஒதுக்குகிறேனா?
5. படிக்கும்போது, புரியாத பகுதிகளையும், சந்தேகம் தோன்றும் பகுதிகளையும் குறித்து வைத்துக் கொள்கிறேனா?
6. மறுநாளே அவைகளை ஆசிரியரிடம் கேட்டுத் தெளிவு பெறும் பழக்கம் உண்டா?
7. நடந்து முடிந்த பாடங்களில் எந்த சந்தேகமும் இல்லை என்ற நிச்சயத்தோடு இருக்கிறேனா?
8. சற்றே கடினமான பாடங்களை, வெறுப்பு, அலுப்பு, அச்சம் கொள்ளாமல், அதிக அக்கறையும், தீவிர முயற்சியும் காட்டிப் படிக்கிறேனா?
9. எந்தப் பாடத்தில் எப்படிப்பட்ட கேள்வி வந்தாலும், சிறப்பாக எழுதும் அளவுக்கு, பரீட்சைக்கு என்னைத் தயார் செய்திருக்கிறேனா?
10. டெஸ்ட், பரீட்சை இவைகளை நான் சீரியஸாகத்தான் எடுத்துக் கொள்கிறேனா?
11. ஒவ்வொரு பரீட்சையிலும் எனது மதிப்பெண்கள் அதிகமாகின்றனவா?
12. பள்ளியில் எனது நண்பர்கள், படிப்புக்கும் பண்புக்கும் பங்கம் விளைவிக்காமல், எனது வளர்ச்சிக்கு பக்கபலமாக இருப்பவர்கள் தானா?
13. எனது குடும்பத்தின் சிரமங்களை நான் உணர்ந்திருக்கிறேனா?
14. எனது பெற்றோர்கள் என்னிடம் என்ன எதிர்பார்க்கிறார்கள்? என்னைப் பற்றி என்ன கனவு காண்கிறார்கள்? என்பது எனக்குத் தெரியுமா?
15. அவர்களின் எதிர்பார்ப்பை ஈடு செய்யும் வகையிலும், கனவுகளை நனவாக்கும் வகையிலும் நான் நடந்து கொள்கிறேனா?

(அல்லது)

நான் என் வாழ்க்கையில் என்ன படிக்க விரும்புகிறேன், என்னவாக விரும்புகிறேன் என்பதை என் பெற்றோரிடம் தெளிவாக சொல்லியிருக்கிறேனா?

16. படிக்கிற காலத்தில் படிப்புதான் மிகவும் முக்கியம். கேளிக்கை, விளையாட்டு, காதல், மற்ற பொழுதுபோக்குகள் எல்லாம் முக்கியமல்ல, அவை படிப்பை மட்டுமல்ல, என் வாழ்க்கையைக்கூட பாழ்படுத்தி விடக்கூடும் என்று எனக்குத் தெரியுமா?

இவைகளுக்கு உங்கள் வாழ்க்கை பதில் சொல்ல இடம் கொடுங்கள். வாழ்க்கையில் மாற்றம் வந்தால் தான், சில கேள்விகளுக்கு பதில் கிடைக்கும் என்றால், உங்கள் வாழ்க்கையில் மாற்றத்தை அனுமதியுங்கள். வெற்றி அடையுங்கள்.



# GOOD WORDS OR BAD WORDS
## What do you speak?


**Rev. பெகின் சாமுவேல்**

இயக்குநர், தமிழ் பிரதேச சிறுவர் ஊழியங்கள்


ஆண்டவரும் அருமை இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள். இந்த பரிபூரண ஜீவன் இதழ் மூலமாக உங்களை சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி. கர்த்தர் நம்முடைய AGCM ஊழியங்களை அதிகமாக ஆசீர்வதித்து வருகிறார். AGCM ஊழியங்களுக்காக தொடர்ந்து ஜெபித்துக்கொள்ளுங்கள்.

பக்திவிருத்திக்கேதுவான நல்ல வார்த்தைகள் உண்டானால் அதையே கேட்கிறவர்களுக்கு பிரயோஜனமுண்டாகும்படி பேசுங்கள் எபே.4:29 என்று வேதத்தில் வாசிக்கிறோம். ஆனால் உலகம் தீய (கெட்ட) வார்த்தை என்று ஒரு பெரிய லிஸ்ட் வைத்து அதை பிரபலமாக்கிக்கொண்டிருக்கிறார்கள். நாம் வாழும் இந்த உலகம் இப்படிப்பட்ட சீர்கேடுகளால் நிறைந்திருந்தாலும், நமக்கும் நம்முடைய பிள்ளைகளுக்கும் எது நாம் பேசக்கூடாத தீய வார்த்தைகள் என்பதை தெரிந்து வைத்திருக்க வேண்டும். உலக மனிதர்களின் பார்வையில் சொல்லப்படும் தீய (கெட்ட) வார்த்தைகளை நாமும் பேசக்கூடாது. ஆனால் அது மட்டுமல்ல. வேதம் நமக்கு கற்றுக்கொடுக்கிற சில பேசத்தகாத தீய (கெட்ட) வார்த்தைகள் என்ன என்பதை இந்த இதழில் தியானிப்போம்.

### வேதம் கூறும் பேசக்கூடாத தீய (கெட்ட) வார்த்தைகள்

### 1. Negative Words are bad words (எதிர்மறையான வார்த்தைகள்)

நம் வாயிலிருந்து ஒருபோதும் எதிர்மறையான வார்த்தைகள் வரக்கூடாது. நீ எதற்கும் உதவாதவன், பிரயோஜனமற்றவன் என்ற வார்த்தைகள் பெற்றோர்களாகிய உங்கள் வாயிலிருந்து வரக்கூடாது. பிள்ளைகளுக்கும் அவ்வாறே நீங்கள் கற்றுக்கொடுங்கள். நேர்மறையான வார்த்தைகள் (Positive Words) நேர்மறையான சூழ்நிலைகளை உருவாக்குகின்றன. கானான் தேசத்தை கர்த்தர் வாக்களித்திருந்தும் வேவுபார்க்க சென்ற பத்து பேர் அந்த ஜனங்களை எதிர்க்க நம்மாலே கூடாது என்று துர்ச்செய்தியை இஸ்ரவேலர் களுக்குள் பரப்பினார்கள் என்று வேதம் சொல்லுகிறது. அவர்களால் கானானுக்குள் பிரவேசிக்க முடியவில்லை. எதிர்மறையாக நாம் பேசுகிற வார்த்தைகள் தீயவார்த்தைகள். எதிர்மறையாக பேசுகிற செய்தி துர்ச்செய்தி என வேதம் சொல்லுகிறது. மரணமும் ஜீவனும் நாவின் அதிகாரத்திலிருக்கும் (நீதி.18:21). நீங்கள் நல்ல, வல்லமையான, ஜீவனைக்கொடுக்கும், நேர்மறையான காரியங்களால் உங்கள் இருதயங்களையும், சிந்தனைகளையும் நிரப்பும்போது, உங்கள் வாயிலிருந்தும் நல்ல வார்த்தைகள் வெளிப்படும். இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும் (மத்.12:34). எதிர்மறையான வார்த்தைகள் தீய (கெட்ட) வார்த்தைகளே.

### 2. Hurting Words are bad words (மனதை காயப்படுத்தும் வார்த்தைகள்)

பெனின்னாளின் வார்த்தைகள் அன்னாளை காயப்படுத்தியது மட்டுமல்லாமல் துக்கப்படுத்தியது. ஒரு ஆங்கில வேதாகம மொழிபெயர்ப்பு பெனின்னாளுடைய வாய் அவளைப் புண்படுத்தியது என்று கூறுகிறது. தேள் கொட்டியது போன்ற சிலருடைய வார்த்தைகள் நம்மை நொறுங்கிப் போக செய்யும். மீகாள் தாவீதைப் பார்த்து கேலியும், கிண்டலுமான வார்த்தைகளைப் பேசினாள். அந்த வார்த்தைகள் தாவீதை கண்டிப்பாக குத்தி கூறு போட்டிருக்கும். அவள் அன்று பேசின வார்த்தைகள் அவளுடைய வாழ்க்கையை எவ்வளவாய் பாதித்தது என்பதை நாம் அறிந்திருக்கிறோம். சிலருடைய வார்த்தைகள் நாம் வாழ்வதற்கே கசப்பாய் தோன்றும் எண்ணங்களை

உருவாக்குகின்றது. பட்டயக்குத்துக்கள் போல் பேசுகிறவர்களும் உண்டு (நீதி.12:18) என்று வேதம் சொல்கிறது. நாம் அவ்வாறு காயப்படுத்துகிற வார்த்தைகளை பேசினால் அவைகள் தீய (கெட்ட) வார்த்தைகளே.

**3. Unnecessary Words are bad words (தேவையில்லாத வார்த்தைகள்)**

மனுஷர் பேசும் வீணான வார்த்தைகள் யாவையும் குறித்து நியாயத்தீர்ப்பு நாளிலே கணக்கொப்புவிக்க வேண்டும் (மத்.12:36). எப்பொழுதும் பேசுவதற்கு முன்பு நான் பேசப்போகிற இந்த வார்த்தை சரிதானா? அவசியமானதுதானா? என்று யோசித்து பின் பேச வேண்டும். அவசியமற்ற, மிகுதியான வார்த்தைகளை நாம் தவிர்க்கும்படி வேதம் நமக்கு கற்றுக்கொடுக்கிறது. அதிகமாக பேசுபவர்கள் எதைப்பேச வேண்டும், எதைப் பேசக்கூடாது என்று வகையறுக்க நேரம் ஒதுக்குவதில்லை. பெரும்பாலும் அதிகம் பேசுவதை ஞானவான்கள் தவிர்த்து விடுவர். நாம் இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கையை தியானித்தால் எந்த ஒரு இடத்திலும் அவர் அனாவசியமான வார்த்தைகளை பயன்படுத்தியது கிடையாது. ஒவ்வொரு வார்த்தைகளும் மிக கவனமுடன் பயன்படுத்தப்பட்டிருக்கும். நம்முடைய வார்த்தைகளும் சுருக்கமாக இருக்கட்டும். ஆகாத சம்பாஷணைகள் செய்கிறோமா என்பதை ஆராய்ந்து பார்த்து அதைவிட்டு விலகுவோமாக. தேவையில்லாத வார்த்தைகள் தீய (கெட்ட) வார்த்தைகளே.

நம் வாயின் வார்த்தைகள் கர்த்தரை பிரியப்படுத்துகிறதாய் இருக்கட்டும். மற்றவர்களை இழிவாய் பேசுகிற வார்த்தைகள், புரட்டு வாய், அற்பமான வார்த்தைகள், சபிக்கிற வார்த்தைகள், காயப்படுத்துகிற வார்த்தைகள், முறுமுறுப்புகள், புறங்கூறுதல் போன்றவைகளுக்கு விலகி நம்மை காத்துக்கொள்வோம். அதற்குப் பதிலாக நம் வாயை துதியினால் நிரப்புவோம்.

என் கன்மலையும் மீட்பருமாகிய கர்த்தாவே, என் வாயின் வார்த்தைகளும், என் இருதயத்தின் தியானமும், உமது சமுகத்தில் பிரீதியாயிருப்பதாக (சங்.19:14).



## ஆதித்திருச்சபைகளின் ஊழியம்

உலகெங்கும் புறப்பட்டுப்போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷம் அறிவியுங்கள் என்று இயேசு சொன்னார் (மாற்கு 16:15). ஆதித்திருச்சபை தீவிரமாக இந்தக் கட்டளையை ஏற்றுக்கொண்டு உண்மையாய் கீழ்படிந்தார்கள். ஆரம்ப கால சபை வேகமாக வளர்ந்து, சமுதாயத்தில் பெரிய மாற்றத்தையும், மறுரூபத்தையும் ஏற்படுத்திய விதத்தை வேதத்தில் காணலாம்.

**1. ஒவ்வொரு கிறிஸ்தவனும் (Everyone) :**

ஆதிச்சபையில் ஒவ்வொரு இரட்சிக்கப்பட்ட விசுவாசியும் சுவிசேஷம் அறிவிக்கும் வேலையில் தாங்களாகவே ஈடுபட்டார்கள். அப்போஸ்தலர் மட்டுமல்லாமல் சிதறடிக்கப்பட்ட ஒவ்வொருவரும் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தனர் (அப்.8:1,4). பிரதான கட்டளை (Great Commission) எல்லா மக்களுக்கும் என்பதை அவர்கள் புரிந்துகொண்டு செயல்பட்டனர் (மத்.28:18-20). இயேசு அனைவருக்கும் சுவிசேஷம் அறிவிக்க வேண்டும் என்கிற கட்டளையை நம் ஒவ்வொருவருக்கும் கொடுத்திருக்கிறார். சுவிசேஷம் அறிவிக்கிற கடமையுணர்விலிருந்து எந்தக் கிறிஸ்தவனும் விடுபட முடியாது. ஒவ்வொரு கிறிஸ்தவனும், கிறிஸ்துவை அறியாத ஒவ்வொருவருக்கும் சொல்ல வேண்டும். கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் குறித்து நான் வெட்கப்படேன் என்றும், அதைப் பிரசங்கியாதிருந்தால் எனக்கு ஐயோ என்றும் பவுல் கூறுகிறார் (ரோமர்1:16; 1 கொரி.9:16). இந்த ஆர்வத்தையும் வாஞ்சையையும் தேவன் நமக்கும் தருவாராக!.

**2.ஒவ்வொரு நாளும் (Everyday):**

ஆதித்திருச்சபையில் இரட்சிக்கப்படுகிறவர்களை கர்த்தர் அனுதினமும் சபையிலே சேர்த்துக் கொண்டு வந்தார் (அப்.2:47). ஆதித்திருச்சபை அனுதினமும் ஊழியம் செய்கிற சபையாய் இருந்தது. அவர்கள் தினந்தோறும் இயேசுவே கிறிஸ்துவென்று இடைவிடாமல் உபதேசம் பண்ணினார்கள் என வேதம் சொல்கிறது (அப்.5:42). அதன் பலன் அனுதினமும் சபை வளர்ந்தது (அப்.16:5). உங்கள் காலை ஜெபத்தில் எப்பொழுதும் “தேவனே இன்று எனக்கு ஒரு ஆத்துமாவைத் தாரும்” என்ற ஒருவரியை சேர்த்துக்கொள்ளுங்கள். பின்னர் அதற்கான வாய்ப்பை எதிர்பாருங்கள். தினமும் தனி நபர்களோடு சாட்சி பகர்வதால் சபையும், தேவ இராஜ்யமும் வளரும். நாம் ஞாயிற்றுக்கிழமை கிறிஸ்வராயிராமல் அனுதின கிறிஸ்தவர்களாய் இருப்போம். இயேசு சீக்கிரம் வருகிறார்.

**3. ஒவ்வொரு இடத்திலும் (Everywhere) :**

அவர்கள் புறப்பட்டுபோய் எங்கும் பிரசங்கித்தனர் என வேதம் சொல்கிறது (மாற்கு 16:20). பவுல் ஜெப ஆலயங்களிலும், சந்தை வெளிகளிலும் தினந்தோறும் உபதேசித்தார் (அப்.17:17). நாம் தெருக்களிலும், வீதிகளிலும் சென்று ஏழை, ஊனர், சப்பாணி, குருடர் யாவரையும் கட்டாயப்படுத்தி அழைத்து வரக்கட்டளை பெற்றுள்ளோம் (லூக்கா 14:21-23). பேருந்து, இரயில், பள்ளிகள், கல்லூரிகள், மருத்துவமனைகள், அலுவலகங்கள், விடுதிகள் எவ்விடத்திலும் எங்கும் ஆத்துமாக்களை ஆதாயம் செய்யப் பிரயாசப்படுங்கள். கிராமங்களுக்கு குழுவாகச் சென்று ஊழியம் செய்யுங்கள் (மத்.21:2). உங்களிலிருக்கிற நம்பிக்கையை குறித்து உங்களிடத்தில் விசாரித்துக் கேட்கிற யாவருக்கும் சாந்தத்தோடும், வணக்கத்தோடும் உத்தரவு சொல்ல எப்பொழுதும் ஆயத்தமாயிருங்கள் (1 பேதுரு 3:15).

**4.ஒவ்வொரு வழியிலும் (Everyway):**

எப்படியாகிலும் சிலரை இரட்சிக்கும்படியாக நான் எல்லாருக்கும் எல்லாமானேன் என்று பவுல் சொல்கிறார் (1கொரி.9:22). கிறிஸ்துவண்டை

ஆத்துமாக்களைக் கொண்டு வருவதற்கு நிறைய யுக்திகளைக் கைக்கொள்ளுங்கள் . இரட்சிக்கப்படாதவர்களுக்காக தொடர்ந்து ஜெபியுங்கள். அருகிலுள்ள பகுதிக்கு ஜெபநடை செல்லுங்கள். கைப்பிரதிகளைக் கொடுங்கள். எப்பொழுதும் புன்முறுவலோடு இதமான கைக்குலுக்கலோடு மக்களை சந்தியுங்கள். அக்கம் பக்கம் உள்ள சிறுவர்களை உங்கள் வீட்டில் அழைத்துப் பாடல்களையும், வேதாகமக் கதைகளையும் கற்றுக்கொடுங்கள். நண்பர்களைச் சபைக்கும். நற்செய்திக் கூட்டத்திற்கும் அழைத்துச் செல்லுங்கள். வியாதியஸ்தர்களை சந்தித்து ஜெபியுங்கள். எவ்விடத்திலும், எவருக்கும் உதவி செய்யுங்கள். பணத்தை கொஞ்சம் செலவு செய்ய ஆயத்தமாயிருங்கள்.எப்படியாகிலும் சில ஆத்துமாவை திட்டமிட்டு சந்தித்து ஆதாயம் செய்யுங்கள். Win the Lost at any Cost

ஆசிரியர்

---

## பரிபூரண ஜீவன் போட்டி எண் -99 (சரியான விடைகள்)

1.பத்மு - தீவு (1:9)
2. அப்பொல்லியோன் - பாதாளத்தின் தூதன் (9:11)
3. எபேசு சபை - ஆதி அன்பை விட்டகுறை (2:4)
4. வானவில்- மரகதம் (4:3)
5. ஏழு கண்கள் - தேவனுடைய ஏழு ஆவிகள் (5:6)
6.பத்து கொம்புகள் -பத்து ராஜாக்கள் (17:12)
7. சர்தை சபை - வெண் வஸ்திரம் தரிப்பிக்கப்படும் (3:5)
8. உலகமனைத்தையும் மோசம் போக்கும் - பிசாசு என்னும் சாத்தான் (12:9)
9. தவளை - அற்புதங்கள் செய்கிற பிசாசுகளின் ஆவி (16:13,14)
10. சிமிர்னா சபை - மரணபரியந்தம் உண்மையாயிரு (2:10)
11. ஆயிரத்திரு நூற்றறுபது நாள் - தீர்க்கதரிசனம் உரைத்தல் (11:3)
12. வெட்டுக்கிளி - தேள்களின் வல்லமை (9:3)
13. பிலதெல்பியா சபை -திறந்த வாசல் (3:8)
14. பழைய பாம்பு - வலுசர்ப்பம் (20:2; 12:9)
15. பெர்கமு சபை - உண்மையுள்ள சாட்சியான அந்திப்பா (2:13)
16. பரிசுத்தமுள்ளவன் - இன்னும் பரிசுத்தமாகட்டும் (22:11)
17. லவோதிக்கேயா சபை - வெதுவெதுப்பான நிலை (3:16)
18. சிறுத்தை - மிருகம் (13:2)
19.தியத்தீரா சபை - தீர்க்கதரிசியென்று சொல்லுகிற யேசபேல் (2:20)
20. ஜெயங்கொள்கிறவன் - எல்லாவற்றையும் சுதந்தரித்துக்கொள்வான் (21:7).

## போட்டி எண் : 100 (சரியான விடை எழுதியவர்கள்)

**செங்கோட்டை**:ராணி பிளஸ்ஸிங்; லின்ஸி; S.முத்துலெட்சுமி; மகேஷ்வரி; ராதாமணி; விஜிராஜா; சாராள் தானு; கிறிஸ்டி; T.சாந்தி; அமுதா கிட்டு; T.கலா; E.கலா; மகேஷ்வரி வெங்கடேசன்; N.K.கோகிலா; கிரிஜா; பியூலா; தங்கமணி; J.சுமதி; தாவீது S.மாரிமுத்து; S.பிரேமலதா; பிரபா; ஜெயசீலன்; மதி; பூங்கோதை; மரகதம்; மயில்ராஜீ; M.சுமதி; மஞ்சு; எஸ்தர் (அச்.பு);|**அச்சிறுப்பாக்கம்**: கல்பனா தேவி; விஷ்னுப்பிரியா; செல்வகுமாரி; மேகநாதன்; ரேஷ்மா; நான்சி; சுதா சார்லின்; சிலம்பரசன்;|**திருநின்றவூர்**: எழலரசி; ரோஸ்லின் மேரி; மாலதி; ரூத்; எஸ்தர் பவானி; ஏடா டாரியா; சரண்யா; ஏஞ்சலின் ஜெனிஷ்; லாவண்யா; கெல்வினா ரென்ஸி; சகுந்தலா பாண்டியன்; லீலா பரணி; மார்த்தாள்; வின்சி;|**இறச்சகுளம்** : கலா; ராதிகா; எஸ்தர்; ஜெஸி; ரேணுகா ரூபன்; நளினா ஷாலினி; சகாய ஜெனிபர்; மகிழ் ஜெயந்தி; சிவதர்ஷினி; ஜெஸ்மின்; ஷோபா; கனகமணி;|

## போட்டி எண் : 100 (சரியான விடை எழுதியவர்கள்)...

**நெல்வாய்** : அருணா; தேன்மொழி; அமலா; கற்பகம்; கலையரசி;|**இடைகால்**: மகேஸ்வரி; சித்ரா; செல்வி ஜான்சன்;|**ஆலங்குளம் (வி)**: மரியாள்; உமா ரோஸ்லின்; பிளாரன்ஸ்; ஸ்டீபன்; ஸ்டெல்லா மேரி; ரெஜினா சாரு; |**மடத்துக்குளம்**: சரண்யா; கிரேஸ் மேரி; பரிமளம்; ரூத்; ஸ்டெல்லா மேரி;|**எடப்பாடி** : ஜோஸ் P.மேரி; அஞ்சலி அரசு; புஷ்பா; மாலதி சுரேஷ்; ரூத் (போவாஸ்); |**KTCநகர்**: பிரேமா ரூத்; ஷர்மிளா ராஜன்; ஷில்வியா; புஷ்பராணி; ஜெஸிலி;|**ஆறுமுகநேரி**: அஜன்ஷியா; செல்வபிரியா; பிரெய்சி; கிரேஸி; ஜாய்ஸ் மேரி;| **ஸ்ரீ வில்லிபுத்தூர்**: மெசி; காபிரியேல்; ஆபிரகாம்; நெல்சன் செல்வராஜ்; **கூடங்குளம்**: செல்வி; கார்த்திகா; வெனிட்டா; சுரேஷ்;|**மதுரை**: சாந்திபால்ராஜ்; மேரி நற்குணம்; அகல்யா; ராஜீ;|**கடையநல்லூர்**: சுகன்யா; ஸ்டெல்லா டாரீஸ்; ஆஷா தேவி; தங்கராஜ்; வினோலியா; விக்டோரியா; செல்வி இந்திராணி;|**திருச்சிராப்பள்ளி**: சாந்தி; குளோரிபெல்லா;| **பழனி**:பிரீத்தி; சாந்தி; மாரியம்மாள்|**அந்தமான் நிக்கோபார்**; ஜாக்லின்;| **குலசேகர குடியிருப்பு** : டேவிட் செல்வகுமார்; |**நெய்யூர்**: ஷீலா ராபர்ட்;|**திருவள்ளுர்**:ஆனந்தகுமார்; சுரேஷ்பாபு;|**உடுமலைப்பேட்டை**: ஏஞ்சல் மார்ட்டின்; |**ஜலகண்டபுரம்**: ராணி அம்மாள்; |**ஆத்தூர்**: பரமேஸ்வரி; தேவி; பிரேமா மதிவாணன்;|**வீரபாண்டிய பட்டணம்** : சுகிர்தா டைட்டஸ்;|**வேப்பம்பட்டு**: லூர்துமாதா; செல்வி|**சின்னாளபட்டி**: சலோமி;|**திருவண்ணாமலை**: சுகுணா;|**திருநெல்வேலி**: சந்திரா ஆல்பர்ட்;|**தஞ்சாவூர்** : விஜி ஜெயராஜ்; தேவகுமார்; **பட்டாபிராம்:** ஜீவா ப்ரீடா; பிரியா; **ஓசூர்:** ஜிம் ரிச்சர்ட்; முத்துராஜ்; ஜெமிந்தா;| **கடாட்சபுரம்** : ரேவதி கில்பர்ட்; சுசிலா;|**அஸ்தம்பட்டி**: நேசம்;|**T.N.பாளையம்**: சுஜா; ஜெப்ரின் இம்மானுவேல்;|**கிருஷ்ணகிரி**: ரேச்சல் அனுஷ்யா|**வில்லுக்குறி**: கிருஷ்ணகுமாரி ஜேசுராஜன்|**நாகர்கோவில்**: அஜி ஸ்டெல்லா; அபிஷா கிரேஸ்;| **கோயம்புத்தூர்** : கிறிஸ்டினா அபிகாயில்; மேரி டேனியல்;|**கூவத்தூர்** : எட்வர்ட்;|**சென்னை**: மேரிகுட்டி; மெர்லின் ஹெலன் பிரிதியா;|**ஆளத்தூர்** : குளோரிபால்|**வத்ராப்**: ஜெபராணி;|**ஆண்டிபட்டி** : மேரி; தபீத்தாள் ராணி; தேவபாக்கியம்; புளோரியா;|**மூலைக்கரைப்பட்டி**: பிரியா;|**உக்கிரன் கோட்டை**: ருக்குமணி ஜெயராஜ்;| **நாசரேத்**: மெர்சி; எஸ்தர்; மகாலெட்சுமி; தாசன் மோசஸ்; |**பண்ணைவிளை**: பியூலா; பவித்ரா; ஜெயலின்சிங்; |**குற்றாலம்**: வெளாங்கனி ராஜாமணி; ரூத் செல்வராஜ்;| **பழையகாயல்** : எலிசபெத்; கிருபா பிளஸ்ஸி;|**K.P.வலசை** : A.P.சீலி;|**தர்மபுரி**: ரூத்;|**கள்ளக்குறிச்சி**: தனம்; மகேஸ்வரி; ரூத்;| **கம்பம்**: ஜோதிமணி;|**தேனி**: கிருபா; திரவியச்செல்வி; தனம்;|**சேர்ந்தமங்கலம்**: பாத்திமா அக்பின்;| **சூளைமேடு**:அருள்மேரி:| **பள்ளிக்கரணை**: ஜோதி;|**சேத்துப்பட்டு**: சுகந்தி பெனடிக்; ரெக்ஸி ஈஸ்வரன்; மாதரசி; செல்வி பெட்ரிசியாள்; ஜெபா ஹெலன்; |**கொட்டிவாக்கம்**: அமுதவல்லி; |**குரோம்பேட்டை**: கோமதி குமார்; ரெபெக்காள்;| **மேடவாக்கம்**: பியூலா ஜாய்ஸ் சுகந்தி; |**திண்டிவனம்**: சாராள் அறிவுச்செல்வி;|**கிச்சிப்பாளையம்**: அந்தோணி அம்மாள்;|**நீலகிரி**: புஷ்பமாலா;|**சேலம்**: பெட்டிரீஷியா டேவிட்; விஜய்: பிளாரன்ஸ்;|**அகஸ்திபர்பட்டி**: நிர்மலா;| **வடசேரி**: எலிசபெத்;|**விளாத்திக்குளம்**: ஷைனி;| **நாங்குநேரி**: மரகதம்; |**ஒட்டப்பிடாரம்**: புஷ்பராணி; |**திருச்செந்தூர்**: தேவதாஸ்; |**தென்னம்பாளையம்**: ரோஸ்லின் சாந்தி; |**கீழபஞ்சப்பூர்**: ஜஸ்டஸ் டேனியல்| **சங்கிலியாண்டபுரம்**: ஜெயந்திமேரி;|**முத்தியால் பேட்டை**: அபிஷா சுமதி;|**நாகபட்டினம்**: வின்சென்ட் ராஜ்;|**தூத்துக்குடி**: சகாய மேரி; அஷோக்;| **திரேஸ்புரம்**: புருசிமா; சில்வெஸ்டன்;| **நாகலாபுரம்**: லில்லி ஜெனட் தங்கம்; |**புளியங்குடி** : ஜெயமணி; **ஆவடி**: சந்திரா; |**தர்மபுரி**: ரூத்; |**அரும்பாக்கம்**: மேரி; |**மூக்குப்பேறி**: செல்லத்தாய் ராணி; |**செம்பாக்கம்**: மரகதலீலா; |**முத்தையாபுரம்**: அள்ளான் மேரி;| **விருதுநகர்**: ஸ்டெல்லா

## பரிபூரண ஜீவன் போட்டி எண் -1
## (ஆதியாகமம் 1-25 அதிகாரங்கள்)

**குறிப்பு : கேள்விக்கான சரியான விடையை மட்டும் தேர்ந்தெடுத்து இருப்பிடத்துடன் எழுதுக**

1. குணசாலியும் கூடாரவாசியுமாய் இருந்தவன் யார்?
2. கர்த்தருக்கு முன்பாக பலத்த வேட்டைக்காரனாய் இருந்தவன் யார்?
3. கீரியாத் அர்பாவிலே மரித்தவள் யார்?
4.ெ தாளாயிரத்து ஐம்பது வயது வரை வாழ்ந்தவன் யார்?
5.எ கிப்து தேசத்தின் அடிமை பெண் யார்?
6. 137 வருஷம் உயிர் வாழ்ந்தவன் யார்?
7. தமஸ்கு ஊரானாகிய இவன் யார்?
8. மகா ரூபவதியும், புருஷனை அறியாத கன்னிகையுமாய் இருந்தவள் யார்?
9.ே கராரின் ராஜா யார்?
10. தேராகுவின் தகப்பன் யார்?
11. நோத் என்னும் தேசத்தில் குடியிருந்தவன் யார்?
12. வேட்டையில் வல்லவனும் வன சஞ்சரியுமாய் இருந்தவன் யார்?
13. ரெபெக்காளின் சகோதரன் யார்?
14. பார்வைக்கு அழகுள்ள ஸ்திரீ யார்?
15. சேத்தின் தகப்பன் யார்?
16. 40 வயதில் விவாகம் பண்ணிக்கொண்டவன் யார்?
17. 365 வருஷம் உயிர் வாழ்ந்தவன் யார்?
18. 99 வயதில் விருத்தசேதனம் பண்ணிக்கொண்டவன் யார்?
19. சோதோமின் வாசலிலே உட்கார்ந்திருந்தவன் யார்?
20. சோகாருடைய குமாரன் யார்?
21. ரெபெக்காளின் தகப்பன் யார்?
22. 969 வருஷம் வாழ்ந்தவன் யார்?
23. உன்னதமான தேவனுடைய ஆசாரியனாயிருந்த சாலேமின் ராஜாவாகிய இவன் யார்?
24. ஜாதிகளின் ராஜாவாகிய இவன் யார்?
25. ஆடுகளை மேய்க்கிறவனாயிருந்தவன் யார்?

---

விடைகள் வந்து சேரவேண்டிய கடைசி நாள் 5.10.2023



**விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி**

**Mrs.சாந்திபால்**
16/50 கொல்லம் மெயின் ரோடு, சீயோன் ஏ.ஜி. சர்ச்
SETC BUS டிப்போ அருகில், செங்கோட்டை - 627 809
தென்காசி (மாவட்டம்). செல் : 88077 18002

## Church Dedication @ Bharathidasan Nagar, Trichy Central Section






## Thoothukudi Central Section CA Camp



## Mission Camp - Virudhunagar





## Men's Camp & Sunday School Teachers Training - Trichy








Registered News Paper Regd. No. 8206 / 62

# FIRST MISSIONARY CONFERENCE- BANGALORE

















**BOOK POST**

If Undelivered please return to
**PARIPOORANA JEEVAN**
30, Navalar Nagar, Madurai - 625 016. Ph: 0452 4200664